
உ

திருச்சிற்றம்பலம்



சித்தாந்தம்

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன்பணிசெய்து கிடப்பதே

சைவ சித்தாந்தப் பெருமன்றத் திங்களிதழ்

மலர் 74	திருவள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை - வைகாசி; மே	இதழ் 5

திருஞானசம்பந்தர்



வெளியீடு

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

4 (முதல் மாடி), வேங்கடேச அக்கிரகாரச் சாலை,

மயிலை, சென்னை – 600 004. தொலைபேசி : 493 5109

பொதுப்பதிப்பாசிரியர் : சித்தாந்தச் செம்மல் எஸ். தியாகராசன் பி.இ.
ஆசிரியர் : முனைவர் வை. இரத்தினசபாபதி
துணை ஆசிரியர் : முனைவர் சா. சரவணன்

பொருளடக்கம்

பெருமன்றத்தின் தேவார, சாத்திர, திருமந்திர இலவசப் பயிற்சி வகுப்புகள்

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சார்பில் திருமுறைக் காவலர் சோமசுந்தரம் செட்டியார் நிறுவியுள்ள கட்டிடவாரியத்தின் ஆதரவில் இலவசமாக நடத்தப்பெறும் தேவார இசைப்பயிற்சி வகுப்புகள்:

1. பூந்தமல்லி, பார்வையற்ற மகளிர் அரசு இல்லம் : வாரந்தோறும் சனி மாலை 3–00 முதல் 4–30 வரை. ஆசிரியர் புலவர் திரு. சு. பாலசுந்தரம்.
2. சென்னை, சைதாப்பேட்டை அன்னதானசமாசம் வித்தியாசாகர் நடுநிலைப்பள்ளி : வாரந்தோறும் இருமுறை. ஆசிரியை : பா. வள்ளி
3. வட சென்னை டாக்டர் குருசாமி முதலியார் தொ.து.வே. மேனிலைப் பள்ளி – வாரந்தோறும் இரண்டு வகுப்புகள். ஆசிரியை. சியாமளா குமார்

திருமந்திரவகுப்பு : பெருமன்ற அலுவலகத்தில் வியாழக்கிழமை தோறும் மாலை 6–30 மணியளவில் "திருமந்திரம்" வகுப்பு நடைபெறும். ஆசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி.

சாத்திரவகுப்பு : பெருமன்ற அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6.30 மணியளவில் **'சிவப்பிரகாசம்'** வகுப்பு நடைபெறும். ஆசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி

பெருமன்ற ஆண்டு உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 100/–
பெருமன்ற ஆயுள் உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 1000/–

(ஆண்டு உறுப்பினர் கட்டணம் என்பது சனவரி முதல் டிசம்பர் வரை)

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

ஆசிரியர் : முனைவர் வை. இரத்தினசபாபதி

துணை ஆசிரியர் : முனைவர் சா. சரவணன்

மலர் 74	மே 2001	இதழ் 5

பதிகப் பெருவழிகண்ட பாலறாவாயர்

(ஆசிரியர் உரை)

உறவும் பொருளும் ஒண்போகமும் கல்வியும் கல்வியுற்ற துறவும் துறவுப் பயனும் காழியர் கோன் திருநாமங்களே என்று அருளாளர்களால் பாராட்டப் பெறும் திருஞானசம்பந்தப் பெருந்தகை 'பதிகப் பெருவழி' கண்டதன் மூலம் அளவிடற்கரிய காலங் கடந்த பெருமையுடைய சைவ நன்னெறியை மறுமலர்ச்சி இயக்கமாக மாற்றி, அதற்கு இயக்க வடிவம் கொடுத்தும், செயற்படுத்திக் காட்டியும் தொண்டாற்றிய முதற் பெருந் தொண்டர் என வரலாற்றுப் பெருமை படைத்தவராகிறார்.

பொருந்திடு ஞானத் தமிழாகரராகிய திருஞானசம்பந்தர் திருந்திய தோணிபுரத்துக்கு இறைவன் திருவருளால் தொடங்கிய பதிகப் பெருவழியானது தன்னுண்மை நிலையில் முழுமையாக வளர்ந்து சிறந்து 'புனிதர் பேரவை' என்ற பெயருடன் வளமும் வாழ்வும் சுரக்கும் நிலையில் அமைந்து விளங்கிய சிறப்பினைப் பெரிய புராணத்துப் புனிதர் பேரவை நிகழ்ச்சிகளால் அறியலாம்.

சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம் சுரந்துண்டார் பிள்ளை என்று புகழப் பெறும் காழிக் கவுணியக்கன்று தாம்பாடிய முதற் பதிகத்தின் திருக்கடைக் காப்புத் திருப்பாட்டில் அமைத்துக் காட்டியருளிய, "பெருநெறிய பிரமாபுரம்" என்றும் "திருநெறிய தமிழ்" என்றும் சுட்டியருளிய தொடர்களை அடிப்படையாகக் கொண்டு,

"பதிகப் பெருவழி காட்டப்
பருப்பதக் கோன் பயந்த
மதியத் திருநுதல் பங்கன்
அருள்பெற வைத்த எங்கள்
நிதியை"

என்று, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியின் இரண்டாஞ் செய்யுளிலும்;

"ஆறது ஏறுஞ் சடையான் அருள்
மேவ அவனியர்க்கு
வீறது ஏறுந் தமிழால் வழி
கண்டவன்"

என்று ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தத்தின் ஐந்தாஞ் செய்யுளிலும் நம்பியாண்டார் நம்பிகள் விளக்கமுற எடுத்துக் காட்டி விளக்கியருளியுள்ளார்கள்.

பதிகப் பெருவழியைக் கால்கோள் செய்த பெருமை காரைக் கால் அம்மையாருக்கே உண்டெனினும், அம்மையாரை உடன் கொண்டு, அம்மையைச் சார்ந்து வரும் அருள்நெறி இளவலாக அமைந்த ஞானப் பெருந்தகை,

"இடர் களையாரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறி பணியாரேனும்"

எனத் திருவாலங்காட்டுப் பதிகம் அருளுவதற்கு முன்னால் அளித்த அற்புதத் திருவந்தாதிக் கருத்துக்களையே உடன் கொண்டு தாம் மேற்கொள்ள வந்த "திருப்பதிகப் பெருவழியை" அமைத்தார்.

துயரிலங்கும் உலகில் பலவூழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்கு பிரமாபுரம்

என்று முதற்பதிகத்தினுள் ஞானசம்பந்தப் பெருந்தகை எடுத்து விளக்கும் கருத்துக்களை நோக்கும் போது, பிரமாபுரமும் சைவ நன்னெறியும் இணைந்து நின்ற வகையில் பெற்ற வரலாற்றுத் தாக்குதல்களையும், தாக்குதல்களுக் கெல்லாம் ஈடுகொடுத்துத் தனித் தன்மையை நிலை நாட்டித் தன் பெயரை இலங்க வைத்ததன் காரணம், அது தன்னகத்துக் கொண்ட பெருநெறிப் பண்பே என்பதையும் இணைத்துக் காட்ட முற்பட்ட தொடரே "பெருநெறிய பிரமாபுரம்" என்று கருதிய நம்பியாண்டார் நம்பிகள்,

"பார் மண்டலத்தினிற் பன்னிரு
பேரொடு மன்னிநின்ற
நீர் மண்டலப் படப்பைப் பிர
மாபுரம் நீறணிந்த
கார்மண்டலக் கண்டத்து எண்தடந்
தோளன் கருணை பெற்ற
தார் மண்டலமணி சம்பந்தன்
மேவிய தண்பதியே"

என்று, தாம் திருஞான சம்பந்தரைப் பாடவேண்டும் என்று எண்ணித் தொடங்கிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி என்ற நூலின் முதற் பாட்டிலேயே குறிப்பிட்டுக் கூறி, இரண்டாம் பாட்டின் முதலிலேயே "பதிகப் பெருவழி காட்ட வந்த எங்கள் நிதி" என்று எடுத்துக் கூறியருளுவாராயினர்.

பிரமாபுரத்துக்குப் பன்னிரு பெயர்களிருப்பினும் முதற்பதிகத்தில் 'பிரமாபுரம்' என்ற பெயரையே எடுத்தாளும் குறிக்கோளையும் "பெருநெறிய பிரமாபுரம்" என்று ஞானசம்பந்தர் காட்டிய இணைப்பையும், பதிகப் பெருவழி என நம்பியாண்டார் நம்பிகள் அமைத்த இணைப்பையும் இணைத்துச் சிந்தித்தால் ஓர் உண்மை புலப்படும்.

பிரமாபுரத்தை ஒத்த நிலையினதே சைவசமயம். காலங்கடந்த வரலாற்றுப் பெருமையுடைய சைவசமயம் பன்னிரு முறை தாக்குண்ணப் பெற்றது. ஒவ்வொரு முறை தாக்குதலுறும்போதும் ஒவ்வொரு கொள்கையை மறுமலர்ச்சிக் கொள்கையாக மலர்வித்து, அக்கொள்கையின் சிறப்பினால் எதிர்ப்பினைத் தாங்கி நிற்கும் ஆற்றல் பெற்றுப் பீடுற விளங்கிய பெருமையினையுடைய சைவசமயம், பன்னிரண்டு உயர்பெருங் கொள்கைகளின் பெருமையால் பெரு நெறியுடையதாகிய சைவமாயிற்று. இவ்வகையில் திருப்பதிகப் பெருவழியானது சைவநற் சமயம் பன்னிருவகைக் கால அமைப்புக்களில் மலர்வித்துக் கொண்டு பீடு பெற நின்றமைக்குக் காரணமாகிய பன்னிரு வளமார் பெருங்கொள்கைகளைக் கொண்டு பெருநெறியாக விளங்கி வருகிறது என இணைத்துக் காணவேண்டும்.

"ஊர் பரந்த உலகின் முதலாகிய ஓர் ஊர் இது என்னப்
பேர் பரந்த பிரமாபுரம்"

என்றும்,

"கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்ததோர் காலம் இது என்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம்"

என்றும் வரையறைகளுடன் எடுத்து விளக்கியருளுவராயினர்.

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் திருவருள் பெற்ற சிறப்பினையுடையவர் நம்பியாண்டார் நம்பிகள் என்பது ஒருபுறமிருக்க, நம்பியாரூரராம் தம்பிரான் தோழர் அருளிய திருத்தொண்டத் தொகை என்னும் திருவருட் பெருநூலைத் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரே உபதேசிக்க, திருவருள் உணர்வுடன் திருத்தொண்டத் தொகையை உபதேச முறையாற் கேட்கும் பேற்றினைப் பெற்றவர் நம்பியாண்டார் நம்பிகள். திருஞானசம்பந்தர் வரலாற்றை அருள் நுட்பம் கெழும அறிந்துரைக்கும் பேறு பெற்றவராதலின், "பெரு நெறிய பிரமாபுரம்" எனப் பெருநெறியையும் பிரமாபுரத்தையும் இணைத்து, ஞானவாரமுதமுண்ட பிள்ளையார் அருளியதன் நுட்பத்தை உணர்ந்து, பிரமாபுரம் பற்றிய குறிப்பு ஒன்றினைக் குறிப்பிட்டருளுகின்றார்.

பிரமாபுரம் பன்னிருமுறை கடல்கோளால் தாக்குண்ணப் பெற்றது. பன்னிரண்டு முறையும் அழியாமல் தன்னை – தன்தனித்தன்மையை இவ்வுலகில் நிலைநாட்டிய பெருமையுடையது.

"... ... ... ஆலித்து
மன்னிருகால் வேலைவளர் வெள்ளத்து உம்பரொடும்
பன்னிருகால் நீரில் மிதந்தவூர்"

என்று, நம்பியாண்டார் நம்பிகள் தாம்பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை என்ற நூலின் 55 ஆம் கண்ணியில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

பன்னிரண்டு முறை தாக்கப்பெற்ற காலத்தும் அழியாமல் நின்றது மட்டுமல்லாமல், அவ்வம் முறையும் ஒவ்வொரு சிறப்புப் பெற்றுத் தன்னை வளர்ச்சியோடு விளங்க வைத்துக் கொண்ட பெருமையுடையது பிரமாபுரம் என்ற குறிப்பினை உணர்த்துகின்றார் நம்பியாண்டார் நம்பிகள்.

பிரமாபுரம் எனப்பெறும் சீகாழிக்குப் பன்னிரு பெயர்கள் உண்டு. இதனைத் தெய்வச் சேக்கிழாரடிகள்.

"பிரமபுரம் வேணுபுரம் புகலி பெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சை வயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்"

என்று கூறும் பெரியபுராண 1917 ஆம் திருப்பாட்டினிற் காணலாம்.

பன்னிரு முறை நீரில் மிதந்தபோது பன்னிரு பெயர்களைத் தாங்கும் நிலை பெற்றதோடன்றி பன்னிரு பெயர்களுக்குரிய பண்புகளையும் கொண்டு திகழ்கின்ற பிரமாபுரம் என்று குறிப்பிட்டுக் கூறும் வகையில்

"... ... ... ஏய்ந்த
புகலி கழுமலம் பூம்புறவம் என்றுஇப்
பகர்கின்ற பண்புற்றதாகித் திகழ்கின்ற
மல்லைச் செழுநகரம்"

என்று ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலையின், 58, 59ஆம் கண்ணிகளை நம்பியாண்டார் நம்பிகள் அமைத்துக் காட்டியுள்ளார்கள்.

திருஞானசம்பந்தர் தாம்பாடிய ஏகபாதத் திருப்பதிகத்தினுள் பன்னிருவகைப் பெயர்களையும் எடுத்துக்காட்டி, அவைகளால் அமைக்கப்பெறும் பன்னிருவகையான சைவ மறுமலர்ச்சிக் கருத்துக்களை இணைத்துக்காட்டி முடிக்கின்றார்.

பன்னிரு வகையான கால அமைப்புக்களில் பெற்ற வரலாற்றுப் பின்னணியையும், பன்னிரு வகையான பேரியற் சைவ மறுமலர்ச்சிக் கொள்கைகளையும் அவ்வப்போது உடனிருந்து கண்டு உணர்ந்த பெருந்தகையாகப் பாலறாவாயர் அமைந்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு பல்வேறு காலகட்டங்களில் விளக்கம் பெற்ற கொள்கைகளை ஒன்றாக இணைத்தறிந்து உணர்த்த முற்படும் பெருந் தொண்டினை ஏற்று, இவ்வுலகம் உய்ய அவதாரம் செய்த பெருந்தகையைத் திருஞானசம்பந்தச் சைவசிகாமணி என்று கருதலாம் என்றும் கொள்ளும் வகையில்,

"ஒரு நெறிய மனம் வைத்து உணர் ஞான சம்பந்தன்"

என்று தம்மை அறிமுகப்படுத்தும் அருளுரையை முதற்பதிகத்தின் திருக்கடைக்காப்பினுள் அமைத்துத் தெளிவுபடுத்தினார் என்று கொள்ளுதல் பொருந்துவதே.

அருணையார் கட்டுரை: அன்பர்கள் முடங்கல்

அன்புடையீர்,

பொருள் : அருணையார் கட்டுரை – முடங்கல் தொடர்பாக

சேலம் திரு சிவமுத்து அவர்களின் கண்டன முடங்கல் வேண்டற்பாலதன்று, தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான் "சைவ நெறி தான் பெற்ற புண்ணியக் கண் இரண்டு" என்ற அருளுரையை விரித்தும், கருத்துக் கருவூலமாக ஆய்வு செய்தும், பெரும்பயன் சேர்ப்பவர், சிந்தாந்தக் கலைமணி சி. அருணை வடிவேலு அவர்கள். சைவப் பயிர் தழைக்க, திருவாசகம் என்ற பெருமழையைப் பொழிந்தவர் மணிவாசகர் என்று போற்றுவதால் தன்னேரிலாத் தகைமை நன்கு இலங்கும், சைவ சமயக் குரவர் நால்வருள் ஏன் இருரை மட்டுமே கண்களாய்ப் போற்றுகின்ற வினாவிற்கு, விடையளிக்கும் வகையால் "அவர்களுள் (நால்வர்) ஏற்றத் தாழ்வு கற்பித்தல் குற்றமாதல் உணர்க" என்று காட்டும் கருத்தும், பாட்டின் பொருள் சேர் விளக்கமும் காண்க.

"குணம் நாடிக், குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்"

நன்றி,

அன்பு அடியேன்,
வெ. இராமமூர்த்தி

சிவபூசைச் செல்வர் சிவ. திரு. ஆ. சோமசுந்தரம், அவிநாசி

அன்பார்ந்த ஐயா, வணக்கம்.

புண்ணியக் கண்கள் இரண்டு என்று காழியர் கோனையும், கல்மிதப்பாளரையும் போற்றி யுரைத்தது பொருந்துவதேயாம். மற்றையோருக்கும் இவர்களுக்கும் பெருமை, சிறுமை கற்பித்ததாக அக்கட்டுரையைக் கருதலாகாது. கண்ணானார் காலத்துச் சைவ சிலைக் கேற்ப அஃதாவது புத்தர், சமண், சமயாயிகள் புகழ் பெற்ற நிலையைத் தாக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தருக்கும் அப்பருக்கும் இருந்தது. அது காலத்தின் நிலை. ஆனால் சுந்தரருக்கு அந்நிலை இல்லை. மாணிக்கவாசகர் தன்வழியிலேயே பயணம் செய்தார். அதனால் நால்வரில் முந்திய இருவருமே சைவத்தைச் செப்பம் செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது. அதை அவர்கள் செய்து முடித்தனர். இது வரலாறு. இப்படிச் சொல்வதால் சுந்தரரை மாணிக்கவாசகரையே குறைத்து மதிப்பிடுவதாக எண்ணலாகாது எவரும் தாம் தாம் வாழ்ந்த காலத்தில் சமயநிலைக் கேற்பத் தொண்டாற்றிய பெருமக்கள், என்றாலும் காலத்தின் வேறுபாட்டாலும் கைக்கொண்ட கடமை வேறுபாட்டாலும் மாறுபாடு தோன்றுவது இயல்பாகும் எனவே இந்த அடிப்படையில் நோக்கின் கட்டுரை போற்றத் தக்கதேயாகும். நம் கண்கள் இரண்டும் அந்த கண்கள் இரண்டையும் கண்டு களிப்பன ஆகுக.

இங்ஙனம்
ஆ. சோமசுந்தரம்

தஞ்சைப் புலவர் ஆ. இராமசாமி அவர்களின் முடங்கலும், விளக்கமும்

போற்றுதலுக்கும் வணங்குதலுக்கும் உரிய அய்யா ஆசிரியப் பெருந்தகையவர்களுக்கு அடி தாழ்ந்த வணக்கம்.

அடியேன், திருவையாற்றில் தமிழ் பயின்று தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவன். தற்போது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் பணி யாற்றிவருபவன். தங்களின் மேலான ஆளுகையின் கீழ் வெளிவரும் சித்தாந்தம் என்னும் திங்களிதழைத் தேனாகச் சுவைத்து மகிழ்பவன். இவ்விதழின் அருமை பெருமைகளை மேடைகளிலும், மேதைகளிடமும் எடுத்துரைத்து வருபவன். இத்துணைச் சிறப்புகளுடன் இதழினைத் தயாரித்திடும் தங்களையும் தங்கள் துணையாளர்களையும் திருவடி தொட்டு வணங்கிப் பாராட்டுதற்கு மகிழ்பவன். நிற்க.

சில திங்கள்களுக்குமுன், சைவ சித்தாந்தப் பெருங்கடல், ஆன்ற விந்தடங்கிய அண்ணல் சைவமும் தமிழும் ஓங்கச் சால்புடன் பேசியும் எழுதியும் தொண்டாற்றிய மேதை. அய்யா அருணை வடிவேல் முதலியார் அவர்களின் உருவப்படத்துடன் வெளிவந்த இதழில் அவரது படத்திற்குக் கீழ் வெண்பாவொன்று எழுதி வெளியிடப் பெற்றிருந்து. அதனைக் கண்ணுற்ற எளியேன், அப்பாடலில் தளைகள் அமைந்திருந்தமையைக் கண்டு திடுக்கிட்டேன். பெரியார்களால், பெரியாரைப் பற்றிப் பெருமைக்குரிய இதழில் வெளியிடப்பட்ட வெண்பாவில் அமைந்திருந்த குறைபாடுகள் எனக்கு மிகவும் வேதனையை உண்டாக்கிவிட்டன.

இயற்றியோர், குறையில்லாமல் இயற்றியிருப்பிலும் எடுத்தெழுதுவோர் – அச்சுக்கோப்பவர் ஆகியோர் பிழைகளில் குறைகள் நேர்ந்திருக்கலாம் என எண்ணுகிறேன். அருள் கூர்ந்து அந்த இதழில் அமைந்த பாடலைப் பார்த்தருளு மாறு மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

ஓ–ம் ஆ. இராமசாமி

அருணையாரின் மறைவைக் கேட்டதும் அழுது அழுது எழுதிய பாடல். குற்றம் இருக்கலாம்; பொறுத்தருளுக.

"நண்பில் அருணையார் நயத்தில் வடிவேலர்
பண்பில் நற்சான்றோர் பாரில் – எண்பெரிய
எத்தவரும் போற்றியிடும் ஏந்தலார் சிந்தாந்த
வித்தகர் நல்லருணை யார்"

ஐகாரக் குறுக்கம் இரண்டிடத்தும் குற்றெழுத்தே போலக் கொண்டு அலகிடுக. இன்றேல் நண்பிலருணையார் என முதலிடத்துக் கொள்க.

பொதுக்குழுக் கூட்டம் 26.5.2001 மாலை 4.00 மணிக்கு

18.3.2001 தேதியில் பெருமன்றச் செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்தவாறு பெருமன்றப் பொதுக்குழுக் கூட்டம் 26.5.2001 தேதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்குப் பெருமன்ற அலுவலகத்தில் (4, முதல் மாடி வேங்கடேச அக்கிரகாரம் சாலை, மயிலை, சென்னை – 600 004) நடைபெறும்.

பொதுக்குழுக் கூட்ட அறிவிப்பு

1. பொதுக்குழுவில் கீழ்க்கண்ட செய்திகள் விவாதிக்கப்படும்.

அ. ஆண்டு அறிக்கையைப் பரிசீலித்தல், ஒப்புதல் அளித்தல்

ஆ. தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு வரவு, செலவு அறிவிக்கை (Statement), ஐந்தொகைக்குறிப்பு (Balance Sheet) முதலியவற்றை ஆய்தல், ஒப்புதல் அளித்தல்.

இ. செயலர் மூலம் வந்த தீர்மானங்களை விவாதித்தல், முடிவு செய்தல்.

ஈ. பெருமன்றத்தின் பல்வேறு குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

உ. தேர்தல் அதிகாரியை நியமித்தல்

ஊ. வரும் ஆண்டிற்குரிய கணக்குத் தணிக்கை அதிகாரியைத் தேர்ந்தெடுத்தல்.

2. உறுப்பினர்கள் ஏதாவது தீர்மானத்தைக் கொண்டுவர எண்ணினால் அதைப்பற்றிய முழுவிவரத்தை எழுத்து மூலமாகப் பொதுச் செயலாளர்/ செயலாளர் (சொற்பொழிவு) மன்ற மேலாளர் அவர்களுக்குக் குறைந்தது 15 நாள்களுக்கு முன்பாகவே (10.5.2001 தேதிக்குள்) சேர்க்க வேண்டும் குறித்த நேரத்திற்குள் பொதுச் செயலாளர் (செயலாளர் சொற்பொழிவு) மன்ற மேலாளர் அவர்களிடம் சேர்ப்பிப்பது உறுப்பினரின் பொறுப்பாகும்.

3. குறித்த காலத்துக்கு மேல் அரை மணிக்குள் குறைந்தது 25 உறுப்பினர்கள் வந்திருந்தாலன்றிக் கூட்டம் நடைபெறாது. அவ்வாறு நடைபெறாமல் தள்ளிவைக்கப்பட்ட பொதுக்குழுக் கூட்டம் 27.5.2001 தேதியில் பெருமன்ற அலுவலகத்திலேயே மாலை 4.00 மணிக்கு வந்திருந்த உறுப்பினர்களைக் கொண்டே நடைபெறும்.

ஊன வெம்பந்தம் போக்க ஞானசம்பந்தம் காக்க

(அமரர்திரு. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, திருவோத்தூர்)

வேலூரில் 30.2.1937ல் நடைபெற்ற, பெருமன்ற 32ஆம் மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு

அருளறம் பூண்ட அண்ணலும் அறிவுக் கடலுமாகிய அவைத்தலைமை தாங்கும் அடிகள் திருவடிகளை வணங்குகின்றேன்.

சைவப் பெருமக்களே ! தாய்மார்களே !

சிவநேசம் சிறந்த செல்வர்கள் கூடிய இச்சீரிய பேரவையில், யான் "ஞானசம்பந்தம்" என்பது பற்றிப் பேசுவேன் என்று நம் சமாஜக் காரியதரிசியவர்களுக்கு விடுத்த விடைக் கடிதத்தில் குறித்திருந்தேன். அது மிகப் பரந்து விரிந்த பொருளாய் இருப்பது கண்ட காரியதரிசியார், அதனை நெறிப்படுத்தக் கருதி, "ஊன வெம்பந்தம் போக்க ஞானசம்பந்தம் காக்க" எனச் சந்தமுற வரைந்து, அது குறித்துப் பேசுமாறு பணித்தார். நம் காரியதரிசியாராகிய சைவத் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் நம் சைவத்துக்குச் செய்துவரும் தொண்டினையும், அதற்காக அவர் மேற்கொள்ளும் இடும்பையினையும் நேரில் நன்கு அறிவேன். அத்தகைய தன்னலங் கருதாப் பெருந்தகையின் பணியை மேற்கொண்டு ஆற்றுவது பொதுவாக எல்லாச் சைவர்க்கும் சிறப்பாக என் போன்றார்க்கும் முதற்கடன். அதனால், என் சொற்பொழிவில் உளவாகும் குற்றங்களை என்பாலேற்றி, நலத்தை இத்தகைய சைவப் பெரியார்க்கு வகுத்து உரிமை செய்துவிடுமாறு வேண்டுகின்றேன்.

பெரியோர்களே ! சென்ற சிலபல நாட்களுக்கு முன்பு சர் சாமுவேல் (Sir Samuel) என்பார் செய்த சொற்பொழிவைப் பத்திரிகைகளில் படித்தேன். அவர் சமயப் பொருள் குறித்துக் காட்டிய உண்மைகள் பல நம் சைவ சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களாக இருக்கக் கண்டேன். உடனே என் நினைவில்,

"வாழ்வெனும் மையல்லிட்டு வறுமையாம் சிறுமைதப்பித்
தாழ்வெனும் தன்மையோடு சைவமாஞ் சமயம்சாரும்
ஊழ்பெறல் அரிது;சால உயர்சிவ ஞானத்தாலே
போழிள மதியினானைப் போற்றுவர் அருள்பெற்றாரே"

என்று நம் அருணந்தி சிவனார் அருளிய திருப்பாட்டுத் தோன்றி என் உள்ளத்தைக் குளிர்வித்தது. இந்நிகழ்ச்சி எல்லாச் சைவப் பெருமக்கட்கும் உண்டாகி யிருக்குமென்று நினைக்கின்றேன். இவ்வாறு பண்டைக் காலத்தில் இருந்து புறச்சமயப் பெருமக்கட்கேயன்றி இற்றைக் காலப் புறச்சமயப் பெரியார்கட்கும் மனத்தில் ஒப்பத் தோன்றி நிலவும் சமயவுண்மைகள் பலவற்றையும் தனக்கு அங்கமாக அடக்கி நிற்கும் சிறப்பு நம் சைவத்துக்கு இருப்பதை நினைக்குந்தோறும் இன்ப நினைவாக இருக்கின்றது. அதன் வளர்ச்சிக்குரிய இன்று நடைபெறும் இச்சமாஜத்தில் இதுகாறும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளால் நாம் நம் இனிய சைவ சமயத்தின் உயிர்நிலைக் கருத்துக்கள் பலவற்றை அறிந்து கொண்டோம் அவற்றுள் "நமது உயிர் ஊன வெம்பந்தம் உடையது; அதனின் நீங்குவதற்காகவே பரமன் விரிந்த உலகையும் சிறந்த உடலையும் நிரந்த கருவிகளையும் மிகுந்தபொருளையும் அருள் சுரந்து நல்கியிருக்கின்றான்" என்பதும், அதற்குப் பெருந்துணையாக இருப்பது ஞானசம்பந்தம் என்பதும் அடங்கும். ஆகவே, ஊன வெம்பந்தத்தைப் போக்குதற்கு ஞானசம்பந்தம் வேண்டும் என்றும், அஃது எய்துவதற்கும், எய்திய வழியும், நாம் அதனைப் போற்றிப் பயன் கொள்ளும் கடன்மை யுடையவர்களாக இருக்கின்றோம் என்றும் அறிகின்றோம். ஞானசம்பந்தம் பெற்றோர் பிறவற்றைப் பாரார். "பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்; பார்க்க வருஞானம் பலஞானம்; அஞ்ஞான விகற்பம்" என்று கருதுவர். அதனால், அவர்க்கு ஊனசம்பந்தமும், அது மிகுந்து ஊன வெம்பந்தமாய்ப் பிணிக்கும் பிணிப்பும் இல்லையாம். ஆகவே அந்த நெறியைவிடுத்து, ஞானசம்பந்தம் என்பதற்கு வேறு பொருள் கொண்டு மேற் செல்லுகின்றேன். ஏனெனில் காரியதரிசியார் முதலில் எனக்கு இட்ட பணிக் கடிதத்தில், "புராணச் சொற்பொழிவும், சமய தத்துவச் சொற்பொழிவும் ஆண்டுதோறும் இடமும் காலமும் எய்துந் தோறும் நடைபெறுகின்றன; நாடோறும் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகட்குத் துணை செய்யக்கூடிய பொருள்களைப் பற்றிய சொற்பொழிவுகளே வேண்டும். அவ்வகையில் உங்கள் சொற்பொழிவு இருக்க வேண்டுகின்றேன்" என்று எழுதியிருந்தார். அதனால், ஞானசம்பந்தம் காக்க என்பதற்கு ஞானசம்பந்தப் பெருமான் எவ்வகையில் நமக்குக் காவலாய் துணையாய்-இருக்கின்றார் என்று கூறுவது தொல்காப்பியர் கூறியது தொல்காப்பியம் எனவும், சேனாவரையர் கூறியது சேனாவரையம் எனவும், அகத்தியர் கூறியது அகத்தியம் எனவும் வரும் வழக்குப் போல, ஞானசம்பந்தர் அருளியது ஞானசம்பந்தம் என்று கொள்ள நின்றதாகக் கொண்டு அதற்கேற்ப, என் சொற்பொழிவை நிகழ்த்துகின்றேன். இன்றேல், காலம் நீட்டிக்கும் என்றும் அஞ்சுகின்றேன்.

1. ஊனவெம்பந்தம்

இனி, ஊனவெம்பந்தம் என்பது யாது ? ஊனம் என்பதற்குக் குறைவு என்பது பொருள், கை ஊனமாயிற்று; கால் ஊனமாயிற்று என்று வழக்கத்தில் இப்பொருளே தோன்றப் பேசுகிறோம். இவ்வூனம் கைகால் முதலிய பருப்பொருளைப் பற்றி நிற்கும்போது நமக்கு இனிது விளங்குகிறது. இது நுண்பொருளாகிய நம் உயிரையும் பற்றி நிற்கிறது. உயிரின் இருப்பு உடலின் செய்கையால் புலனாவது போல, இவ்வூனமும் உயிரின் செய்கை யிடத்தே புலனாகிறது. உயிர் தனக்கென வடிவொன்றும் இல்லாதது; அதனால் அதனை நுண்பொருள் என்கின்றோம். மற்ற, நம் சமயச் சான்றோர் "அஃது அறிவு வடிவிற்று", என்று கூறியிருக்கின்றனர். இலக்கண நூலுரைகளிலும், ஆசிரியன்மார், "உயிர் எத்தன் மைத்து என்று வினாவியவழி, உயிர் உணர்தற் றன்மைத்து என்பது செவ்வனிறை" என்று உதாரணங் காட்டி வற்புறுத்தி இருக்கின்றனர். அறிவு வடிவிற்றாகிய உயிர் மலத்தால் அறியாமையுற்று அறிவு செயல்களிற் குறைவு அடைகின்றது. குறைவு பயப்பது ஊனம்; உயிரின் அறிவு, செயல்களின் குறைவு பயப்பது மலம். ஆகவே, உயிர்க்கு மலத்தோடு உண்டாகிய சம்பந்தம் ஊனசம்பந்தமாயிற்று. அவ்வூன சம்பந்தத்தால் உயிர் பல துன்பச் செயல்களைச் செய்து வருந்துவது குறித்து, மல காரியங்கள் ஊனசம்பந்தம் எனக் கூறப்படுவதுண்டு. தொடுவழி நீங்கி விடுவழிப் பரந்து பற்றும் நீர்ப்பாசிபோல, உயிரை விடாது பற்றி, அஃது எடுக்கும் உடம்புதோறும் சென்று தொடரும் வெம்மையால் ஊனசம்பந்தம் ஊனவெம்பந்தம் என்று கூறப்படுவதாயிற்று. இவ்வூனம் அறியாமையை உண்டுபண்ணி நிற்பது குறித்து, நம் ஞானசம்பந்தப் பெருந்தகை, இதனை, "ஊனத்திரள்" என்கின்றார்; இதனால் உண்டாகும் துன்பச் செயல்களாகிய வினை வகைகளை "ஊனத்திரள்" என்று அறிவுறுத்துகின்றார். இவை,

"ஊனத்திருள் நீங்கிட வேண்டில்,
ஞானப் பொருள் கொண்டடி பேணும்
தேனொத் தினியானம ரும்சேர்
வானம் மயிலாடு துறையே" (மயி : 3)

என்றும்,

"ஞானத்திரளாய் நின்றபெருமான், நல்ல அடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவும் உண்மைப் பொருள்போலும்,
ஏனத்திரளோ டினமான்கரடி இழியும் இரவின்கண்
ஆனைத்திரள்வந் தணையும் சாரல் அண்ணாமலையாரே" (அண்ணா :3)

என்றும் கூறிய அருட்பாக்களால் விளங்குகின்றன.

இனி, ஊனசம்பந்தமாவது தேகசம்பந்தம் என்றும், அதுவே பிறவித் தொடர்பு என்றும், அதனைத் தொடர்பறுப்பதற்கு ஞான சம்பந்தம் வேண்டப்படும் என்றும் பொருள் கொள்ளத்தக்க நிலையில் இத்தலைப்பினை மேற்கொள்ளலாம். அவ்வாறு கொள்வதற்கும் ஞானசம்பந்தப் பெருமான் துணையருளி இருக்கின்றார். "ஊனமாம் உடம்பினில் உறுபிணிகெட எண்ணில் ஞானமாமலர் கொடு நணுகுதல் நன்மையே" (கானப். 7) என்பது அவர் திருவாக்கு.

ஊனவெம்பந்தம் உற்ற உயிர்நிலை

உயிர்கள் ஊனவெம்பந்தம் உற்று நிற்கும் நிலையை நெறியாகக் கொண்டு, இக்காலமக்க ளுயிரின் இயல்புகளை ஒருவாறு காணலாம். ஒரு சிலர் இதனால் முற்றவும் மூடப் பெற்று இருக்கின்றனர். சிலர் சிறிதே விளக்கமுற்றுப் பெரிதும் மூடப்பெற்று உளர்; சிலர் பெரிதும் விளக்க முற்றுச் சிறிதே மூடப் பெற்று உளர்; சிலர் நிரம்பவும் விளக்க முற்றுச் சிவஞானசம்பந்தம் எய்தி நிற்கின்றனர். இந்நான்கு திறத்தார்க்கும் நம் ஞானசம்பந்தப் பெருந்தகை நன்னெறிகளைக் காட்டி அருளுகின்றார்.

ஊன வெம்பந்தத்தால் உயிரறிவு முற்றவும் மறைக்கப்பட்டு நிற்பவர், தம்மை அனாதியே பற்றியிருக்கும் ஊனத்தை, மலசம்பந்தத்தைப் போக்கிக் கொள்ளுதற்கே இவ்வுடலும், உலகும், பொருளும், கருவிகரணங்களும், . இன்ப துன்பப்பயன்களும் பரமனால் அருளப்பெற்றிருக்கின்றன என்பதனை உணர்ந்திலர். இவற்றால் உளதாகும் இன்பமும் சிறிது நேரமே நுகரப்பெற்றுக் கழிவதை அறிவது இலர். இவற்றை நன்கு பயன்படுத்து முகத்தால், தம் ஊனத்தைப் போக்குவது தமக்குத் தலையாயகடன் என்பதை நினைப்பது இலர். இவற்றால் தாம் நுகரும் சிற்றின்பத்தைப் பேரின்ப மாகக்கருதி, இவ்வின்ப வரவுக்கு ஏதுவாயுள்ள உலகியற் பொருள்களை, "நிலையுடையவை; தமக்கே உரிமைப் பட்டவை" எனப் பிறழ உணர்ந்து, தம் உடலைப் பேணிப் பெருந்தீனிதந்து, பூணாரங்களால் பொலிவு தோன்ற அலங்கரிப்பதே பொருள் என்று கருதி வாழ்கின்றனர்.

இப்பெற்றியோர் தமது ஊனவெம்பந்தத்தை உணர்ந்து ஞானசம்பந்தம் எய்துவது குறித்து நம் ஞானசம்பந்தப் பெருமான் யாக்கை நிலையாமை, செல்வத்தின் நிலையாமை, இளமை நிலையாமை முதலியவற்றை நன்கு விளக்கி அறிவுறுத்துகின்றார்.

"கேடு மூப்புச் சாக்காடு கெழுமி வந்து நாடொறும்
ஆடு போல நரைகளாய் ஆக்கை போக்க தன்றியும்
கூடி நின்று பைம்பொழிற் குழகன் கோவ லூர்தனுள்
வீடு காட்டும் நெறியினான் வீரட் டானம் சேர்துமே" (கோ வீரட்ம)

என்பது அவ்வகையிற் கூறியருளிய ஞானவுரைகளுள் ஒன்று. போக்கதன்றியும் என்பது போக்குவது அன்றியும் என்று பொருள்படும். உம்மை இசைநிறை, போக்குவது விடுத்துக்கூடி நின்று வீரட்டானம் சேர்தும் என முடியும். சேர்தல், இடை விடாது சிந்தித்தலுமாம். இதன்கண் கூடிநின்று சேர்தும் என்று கூறியருளுவதால், இவர்கள் சுயநல விருப்பால் பிறர் தொடர்பின்றியும், ஞான நெறியில் நில்லாது, ஊன நெறியில் வேறுபட்டும் நிற்கிறார்கள் என்றும், இவர்கள் ஞான நெறி நின்று, ஊன சம்பந்தத்திலிருந்து வீடு பெறுதற்குரிய நெறியினைப் பரமன் காட்டி நிற்கின்றான் என்பது தொனிக்க "வீடு காட்டும் நெறியினான்" என்றும் அருளி யிருக்கின்றார்.

இனிச் சிறிது தெளிவுற்றுப் பெரிதும் மறைக்கப்பட்டவர், "யாக்கை நிலையாது; அது நிணப்பொதியே. இம்முறையே பிற பொருள்களும், இன்பங்களும், இளமை முதலிய வளமைகளும் நிலையாதன என்பது உண்மையே. ஆயினும், இவற்றின்மேல் பற்றுவையாது, எல்லாவற்றிற்கு மேலான பரமனையே நினைந்து வாழ்வது நமக்கெல்லாம் முடிவதில்லை; நற்குணமுடைய பெரியோர்க்குத்தான் ஆகும். அறிவில்லாத எமக்கு அத்தகைய உயர்ந்த குணம் ஏது ?" என்று கூறித் தப்ப நினைக்கின்றனர். இவர்கள் சிறிது தெளிந்து, நிலையாமை உணர்ந்த வழியும், ஊனத்தின் பெருமறைப்பால் மயங்கிப் பேசுவதுகண்ட நம் பெருந்தகைப் பிள்ளையார், தம் நெஞ்சிற்குக் கூறுவாராய், அவர் கேட்ப,

"நிணங்குடர் தோல்நரம் பென்புசேர் யாக்கைதான் நிலாயதன்றால்,
குணங்களார்க் கல்லது குற்றம் நீங்கா(து) எனக் குலுங்கினாயே;
வணங்குவார் தானவர் வானவர் வைகலும் மனங்கொடேத்தும் (சே"
அணங்கன் ஆரூர் தொழுதுய்யலாம் மையல் கொண்டஞ்சல் நெஞ்
(ஆரூர் :3)

என்று அருளுகின்றார். இதன்கண், குணமுடையார்க்கல்லது தம்போற் குற்றமுடையார்க்கு ஆகாது என்று மயங்கிப் பிணங்கும் அவர்களை, குற்றமுடைய தானவரும், குற்றமில்லாத வானவரும் நாளும் வழிபடுமாறு கூறித்தெருட்டி, அவரது மயக்கத்திற்குப் பெரிதும் இரங்கி, "மையல் கொண்டு அஞ்சல்" என்று பரிந்தருளுகின்றார்.

இனிப்பெரிதுந் தெளிவுற்றுச் சிறிதே மறைக்கப்பட்டவர்களைக் காண்கின்றார். இவர்கள் "இல்வாழ்க்கையை நினைந்து, அதன்கண் உண்டாகும் இன்பத்தையே விரும்பி ஒழுகினால், அது மட்டும் பிறப்புக்கு ஏதுவாய்த் துன்பத்தை உண்டாக்குகிறது. அதனால் துறவறம் கொள்வதே தக்கது. ஆயினும்,

"அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
ஓடி உய்தலும் கூடுமன்
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே" (புறம் 198)

எனப் பெரியோர் கூறியதுபோலக் குடும்பத்தொல்லை காலைக் கட்டிக்கொள்கிறது. இதனை நீக்க முடியவில்லை; என்னசெய்வோம்" என்று மிக்க அறிந்தார் போலக் கூறுகின்றனர். இவர்கட்குக் கூறுமுகத்தால்,

பிறவியால் வருவன கேடுள; ஆதலால் பெரிய இன்பத்
துறவியார்க் கல்லது துன்பம் நீங்கா(து) எனத் தூங்கினாயே
மறவல்நீ, மார்க்கமே நண்ணினாய் தீர்த்த நீர்மல்கு சென்னி
அறவன் ஆரூர் தொழுதுய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே"
(ஆரூர் 5)

என ஆற்றுப்படுத்துகின்றார். பெரிய இன்பத்துறவியார் என்ற தொடருக்குப் பேரின்பத்தைக் கருதித் துறவு மேற்கொண்டவர் என்று கொள்வதை விடுத்து, துறக்கும் வலியில்லாத இவர்களாற் பெரிதாக மதிக்கப்பெற்று, இவர்களை அதனை மேற் கொள்ளாவாறு தடுத்துப் பிணித்து நிற்கும் பெருமையிணையுடைய இல்வாழ்க்கை யின்பத்தைத் துறந்தவர் என்று யான் கொள்ளுகின்றேன். அதுவும் ஒருவகையில் நல்லறமாய், உயிரோம்பும் நற்செயலாவது குறித்து, நம் பெருந்தகை, "மறவல் நீ மார்க்கமே நண்ணினாய்" என்றும், "அந்நிலையில் இல்வாழ்க்கைக்குரிய அறங்களைக் கடைப்பிடித்து, பரமனை வழிபடத் தொடங்கின், வீடுபேறு உண்டாம்" என்பார், "அறவன் ஆரூர்தொழுது உய்யலாம்" என்றும் அருளிச் செய்கின்றார்.

இனி, இவர்களுள், மேற் கூறியவர்களைப் போலாது, வினைத் தொடர்பின்மேல் பழியேற்றி, "செய் தீவினை யிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால், எய்தவருமோ இருநிதியம்" என்றும், "பண்டு செய்வினையலால் பரவு தெய்வம் ஒன்று உண்டு எனின், தான் பயன் உதவவல்லதோ ?" என்றும், "செய்வினை யின்றெனின் தெய்வம் என்

செயும்'' என்றும் வாய் வன்மை தோன்றக் கூறிச் சிலர் தப்ப முயல்கின்றனர். அவர்களை நோக்கி,

"அவ்வினைக்கு இவ்வினை ஆம் என்று சொல்லும் அஃதறிவீர் !
உய்வினை நாடாதிருப்பது உந்தமக்(கு) ஊனமன்றே ?
கைவினைசெய்து எம்பிரான் கழல் போற்றுதும்; நாம் அடியோம்;
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா; திருநீலகண்டம்'' (திருநீல.1)

எனக் கழறித் தெருட்டி யருளுகின்றார். "வினைத் தொடர்பின் இயல்பினை அறிந்திருக்கின்ற நீங்கள் அதன் தொடர்பை அறுப்பதற்குரிய வினைகளை நாடாமல் இருக்கின்றீர்களே ! பிறவிக் கேதுவாகிய வினைத்தொடர்பைச் சிவஞானச் செயலாகிய பதிவினையால் அறுத்தல் வேண்டும். அதனை நாடாமல் இருப்பது உங்கட்கு ஊனமன்றோ ? நாம் கைவினை செய்து பரமன் திருவடியைப் போற்றலாம், வம்மின். இதுவே அப்பதிவினை; இதனைச் செய்யின், பிறவிக்கு ஏதுவாகிய நம் செய்வினை நம்மைச் சேராவாறு பரமன் நீக்குவன். பரமனை அது செய்யுமாறு செய்தற்கு அவனை வணங்குவதல்லது வேறு நெறியில்லது; ஏனெனில் நாம் அடியோம். அடிமைகள் தமக்கு வேண்டுவதொன்றனைத் தமது ஆண்டவனை, தலைவனை, வணங்கிப் பெறுவதன்றி வேறொன்றும் செய்தற்கு இல்லை. வணங்கிப் போற்றின் அப்பரமன் அவ்வருளைச் செய்வன் என்பதற்கு அவனது திருநீலகண்டமே சான்று'', என்று இதன் கட் கூறியருளுகின்றார். தேவர்கள் அமுது வேண்டிக் கடலைக் கடைந்தபோது, அவர்தம் செய்வினைப் பயனாய் விடம் எழுந்தது. அவர்கள் பரமனுக்கு அடிமையாதலின், அவர்கள் கைவினை செய்து பிரான்கழல் போற்றினர். அவன் அதனைத் தான் உண்டு, அவரைச் சாராதவாறு செய்தருளினான். திருநீலகண்டம் அவ்வருட் செயலைச் சுட்டி நிற்கின்றது.

இனி, உயிரறிவும், கல்வி கேள்விகளினாலாகிய செயற்கை யறிவும் பெற்றுத் துலங்கும் அறிஞர், உயிர், உயிரைப் பற்றி நிற்கும் ஊனவெம்பந்தம் ஆகியவற்றை உணர்ந்து வைத்தும், துறக்கம் முதலிய பதமுத்தி நயப்பால், பரமுத்திக்குரிய சிவஞானப் பேற்றில் கருத்தூன்றாது நிற்கின்றனர். அவர்கள், "இம்மைச் செய்தது மறுமைக் காமெனும், அறவிலை வணிக'' (புறம். 134) ராய் இருப்பது கண்டு, இதற்குக் காரணம், பரஞானத்தில் ஊற்றமின்மை என்று உணர்ந்து, பரஞானசம்பந்தம் மிகுமாறு முயல வேண்டும் என்று அவர்கட்கு அறிவுறுத்துகின்றார். அதனை,

"ஊனமிலராகி யுயர் நற்றவமெய் கற்றவை உணர்ந்த அடியார்
ஞான மிகநின்று தொழ நாளுமருள் செய்யவல நாதனிடமாம்
ஆனவயல் சூழ்தருமல் சூழியருகே பொழில்கள் தோறுமழகார்
வானமதியோடு மழை நீர் முகில்கள் வந்தணவும் வைகாவிலே"

(வைகா. 3)

என்ற திருவாக்கிற் காணலாம்.

இவ்வாறு ஊனத்தால் முற்றவும் மறைக்கப்பட்டவர் முதல், உண்மையறிவு நிரம்பியவர் ஈறாக உள்ள அனைவர்க்கும், நம் ஞானசம்பந்தப் பெருந்தகையார் கூறும் ஞானசம்பந்தம் உண்டாகும் முறையைக் குறிக்கொள்ள வேண்டும். இவர்கள் எல்லோருக்கும் ஒரே நெறியையே கூறியருளியிருக்கின்றார். இவர் கூறியருளிய தெல்லாம் பரமனை வழிபடுவதொன்றே தவிர வேறில்லை. வழிபடுவோர் பலதிறத்தினராக இருப்பினும், அவர்கட்கு ஒரு நெறியே கூறப்பட்டிருக்கிறது. உண்ணும் உணவு ஒன்றேயாயினும், உண்கின்றவர் உழைப்புத்திறனுக்கு ஏற்பப் பயன் விளைவிப்பது போல, வழிபாட்டு நெறி ஒன்றே யாயினும், அவரவர்க்கு வேண்டும் குறையினை நிறைவு செய்யும் என்பது கருத்து, உழைப்பாளிகளுள், கண், காது, மனம், மெய் முதலியவற்றைத் தனித்தனியே வேலை வாங்குபவர் உளர். அவர் கொள்ளும் உணவு ஒருவகைத்தேயாயினும், அஃது அவ்வக்கருவிகட்கு வன்மையை விளைவிப்பது போல, இவ்வழிபாடு, ஞானசம்பந்தம் உண்டாவதற்குரிய வாய்ப்பினை உண்டு பண்ணும்.

இனி, இவ்வழிபாட்டின்கண், பாமனுக்குரிய தொண்டுகளைப் புரிந்து, அவன் திருவடியை நினைந்து பரவுமிடத்து, மனக்குற்றங்களை அறக்களைந்து வழிபடவேண்டும். மனத்தில் நிகழும் கள்ளநினைவுகளையும் வஞ்சநினைவுகளையும் ஒழிவின்றிக் கடிந்தால், பரமன் அவர்தம் உள்ளத்துள் தோன்றி, அவரது ஊனத்தைப் போக்கி, எய்துவிப்பன் என்று நம் ஞானசம்பந்தப் பெருந்தகையார் உபதேசிக்கின்றார். இதனை அவ்வப்போது பல பாசுரங்களில் வற்புறுத்தி யிருக்கின்றார்.

"கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட் டருத்தியோ
டுள்ள மொன்றி யுள்குவார் உளத்துளான் உகந்தவூர்,
துள்ளிவாளை பாய்வயல் சுரும்புலாவு நெய்தல்வாய்,
அள்ளல் நாரை ஆரல்வாரும் அந்தணாரூர் என்பதே" (ஆரூர் . 6)

எனத் திருவாரூர்த் திருப்பதிகத்தும், திருக்கோட்டூர்த் திருப்பதிகத்தில், "உருகுவார் உள்ளத் தொண்சுடர் தனக்கென்றும் அன்பராம் அடியார்கள், பருகு மாரமுது" எனப் பரவிப் பணிகின்றார். எனவே நாமும் அது செயல் வேண்டும் என்பது அவர் திருவுள்ளம். இவ்வாறு பரவிய வழி, பரமன், அப்பரவுவோர் நெஞ்சில் நிகழ்த்தும் அருட் செயலைக் "கள்ள நெஞ்ச" என்று தொடங்கிய அத் திருப்பாசுரத்தேயே உள்ளுறையால் குறித்தருளுகின்றார்கள். அதன் கண், சுரும்புலாவு நெய்தல் என்பது சுற்றத்தார் சூழவாழும் மக்களைக் குறிக்கும். அதனிடத்தில் ஆரல் மீன் தங்கியிருப்பது அவர்தம் உயிரறிவைப்பற்றி மறைத்து நிற்கும் ஊனத்திளைக் குறிக்கின்றது. நாரை அந்த ஆரல்மீனைக் கவருவது, ஆவ்வூனத்திரளைப் பரமன் தான் ஏன்று கழிப்பதைக் குறிக்கின்றது. இவ்வாறு ஊனசம்பந்தம் போக்குதற் பொருட்டு ஞானத்தின் திருவுருவாகிய தன் இருப்பால் சிவஞான சம்பந்தம் எய்துவிக்கும் திருவருட் செயலை உள்ளுறையாற் கூறின நம் பெருந்தகைப் பிள்ளையார் பிறிதோரிடத்தில்,

> "..
> உள்ளமார்ந்த அடியார் தொழுதேத்த உகக்கும் அருள்தந்தெம்
> கள்ளமார்ந்து கழியப் பழிதீர்த்த கடவுள் இடம்என்பர்
> புள்ளையார் வயலின் விளைவாய் வளம்மல்கும் புகலூரே" (புக.7)

என்று வெளிப்படையாக விளங்கத் தெரிவித்திருக்கின்றார். திருநள்ளாற்றுத் திருப்பதிகத்தில், "நெஞ்சம் இது கண்டு கொள் உனக்கென நினைந்தார், வஞ்சமதறுத்தருளும் மற்றவனை" என வழுத்துகின்றார்.

இவ்வகையால், ஊனவெம்பந்தத்தால் உணர்வு சுருங்கிக் கையற்று நிற்கும் நம்மவர் பலரையும் நன்குணர்ந்தும், நம் மனத்தை அவ்வப்போது அலைக்கும் ஐயங்களை அறிந்தும் தகுவன கூறித்தெருட்டும் நம் ஞானவள்ளல், தமது 'புனித வாய்மலர்ந்து' அழுது பெற்ற ஞானசம்பந்தம் நமக்குப் பேருபகாரமாக விளங்குகிறது.

3. ஞான சம்பந்தம்

நம் ஞான சம்பந்தப் பெருமான் பெற்ற ஞானத்தை நம் சேக்கிழார் பெருமான் நான்கு கூறுகளாக விரித்துக்கூறியிருக்கின்றார். 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்'

என்பன அந்நான்கு ஞானக்கூறுகளாகும். இனி இவற்றைச்சிவனடியே சிந்திக்கம் சிவஞானமாகிய பவமதனை யறமாற்றும் ஞானம் எனவும், கலைஞானமாகிய மெய்ஞ்ஞானம் எனவும் இரண்டாக்கியும் கூறுவர். வேறு சிலர் இந்நான்கினையும் கேள்வி, சிந்தனை, தெளிதல், நிட்டைகூடல் என்ற நான்கின் ஞானமெனவும் கூறுவர். யாவர் யாது கூறினும், சேக்கிழார் திருவாக்கில் இந்நான்கு ஞானமும் கூறப்படுவது உண்மை.

இந்த நால்வகை ஞானங்களையும் சேக்கிழார் எவ்வாறு கண்டார் ? சேக்கிழார் பாடல்களையும் தேவாரப் பாடல்களையும் நோக்கிய வழி, அவர் இவற்றைத் தேவாரத்தே ஆராய்ந்து கண்டாராதல் வேண்டும். திருத்தொண்டர் புராணத்தையும் தேவாரத்தையும் ஒப்பு நோக்கியவர், தேவாரச் சொற்றொடர்களும், பொருள்களும் பொருட்கூறுபாடுகளும் பெரிய புராணத்தே நிரம்பிக்கிடப்பதை இனிது கண்டிருப்பர். இதனால், ஞானசம்பந்தப் பெருமான் பெற்றனவாகக் கூறப்படும் ஞானவகை நான்கும், சேக்கிழார் பெருமானுக்குத் தேவாரத்திற்றான் கிடைத்தன என்று நாம் கொள்ளல் வேண்டும். அதனை ஒரு சிறிது கூறி, இச்சொற்பொழிவை முடித்துக் கொள்ளுகின்றேன்.

முதலாவது "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" என்பது. சிவனடியைச் சிந்திக்கும் ஞானம் சிவஞானமாகும். சிவஞான மென்றதனாலேயே, அது சிவன் திருவடியைச் சிந்திக்கும் ஞானம் என்பது பெறப்படுவதால், "சிவனடியே" எனமிகுத்துச் சொல்லியிருப்பதால், அதற்குத் தாற்பரியம் ஒன்று உண்டு என்று தோன்றுகின்றது. அஃதாவது யாது ? முதற்பொருளின் மூவகை நிலைகளாகிய அறிவு, இச்சை, தொழில் என்ற மூன்றனுள், அறிவு நிலை சிவன் என அறிவு நூல் கூறுகிறது. இதனை,

> "ஞானமே யானபோது சிவன், தொழில் ஞானமொக்கில்
> ஈனமில் சதாசிவன் பேரீசனாம் தொழிலதேறின்
> ஊனமேற் கிரியை வித்தை உருத்திரன் இலய போகம்
> ஆனபே ரதிகாரத்தோ டதிகரணத்தனாமே" (சித்தி : 1 : 65)

எனவரும் சிவஞானசித்தித் திருவிருத்தம் விளக்குகின்றது ஞானப்பேற்றுக்குரிய ஞானநிலையாய சிவத்தின் ஞானத்தைப் பெறல் வேண்டின், அதற்கு உரிய பற்றுக்கோடாவது அதன் திருவடியன்றிப் பிறிதில்லை. அதனால், சிவனது ஞானத் திருவடியை விதந்து "சிவனடியே" எனச் சிறப்பித்திருக்கின்றார். இந்த ஞானத்தின் பயன் சிவானந்தப் பெரும் போகமாகலின், அதனையும் "திருப்பெருகு

சிவஞானம்" எனச் செப்பியுள்ளார். நம் ஞானசம்பந்தப் பெருந்தகையார், "திருவளர் செம்மையாகி அருள்பேறு மிக்கதுளதென்பர் செம்மையினரே" எனத் திருநாரையூர்த் திருப்பதிகத்தில் காட்டியருளியிருக்கின்றார். இத்திருவடி ஞானமாகிய சிவ ஞானத்தின் சிறப்பை, சிவனது திருவடியைக் கூறுமுகத்தால் நாம் உய்த்துணர வைத்துள்ளார்.

"தோலுடையான், வண்ணப் போர்வையினான்,
சுண்ண வெண்ணீறு துதைந்திலங்கு
நூலுடையான், இமையோர் பெருமான்,
நுண்ணறிவால் வழிபாடு செய்யும்
காலுடையான், கரிதாய கண்டன்
காதலிக்கப்படும் காட்டுப் பள்ளி" (கீழை : 4)

என்றும்,

"தேனினும் இனியர், பாலன நீற்றர், தீங்கரும் பனையர், தம்
திருவடி தொழுவார்
ஊனயந்துருக வுவகைகள் தருவார், உச்சிமேலுறைபவர்,
ஒன்றலா தூரார்" (அச்சிறு 2)

என்றும், இவ்வாறு பல திருப்பதிகங்களிற் பரக்கக் காண்கின்றோம்.

இனி, இரண்டாவது, "பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்" என்பது. பவம் என்பது பிறப்பு. அதனை அறமாற்றுவதாவது, மீண்டும் பிறப்பிறப்புக்குரிய நெறிக்கண் செலுத்தாது, பிறவா நிலைக்குரிய ஞான நெறிக்கட் செலுத்தி ஞான வடிவினதாக மாற்றுவது. சிவத்தின் திருவடி ஞானத்தால் அதன் திருநின்ற செம்மை நிழற் சேர்வார்க்கு அவ்வடிவே நம் சேக்கிழார் பெருமான் கூறியிருக்கின்றார். நாவரசப் பெருந்தகையார் ஞானப் பேற்றில் திளைத்து, சிவபோகம் துய்க்கப் புக்க செய்தியை, "நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி, அண்ணலார் சேவடிக் கீழ் ஆண்ட அரசு அமர்ந்திருந்தார்" என்று கூறியிருக்கின்றார். பவத்தை மாற்றுதற் குரிய பாங்காவது, பவத்தின் காரண காரியத் தொடர்ச்சியையும், அதனை மாற்றா வழி எய்தும் துன்பத்தையும் உணர்ந்து, அத்தொடர்ச்சிக்குரிய வினைத் தொடர்பைக் கெடுத்து, மறுபடியும் தொடாத அறிவு நிலையை எய்துதற் குதவும் ஞானப் பேற்றுக்குரிய நல்லொழுக்கமாகும். அவ்விடத்தில் ஓங்கும் ஞானமும் சிவ ஞானமேயாய், அது, சிவனடியைச் சிந்திக்கும் பரஞானமேயாக முடியும் இயைபுகருதி, இதனை, "திருப்பெருகு சிவஞானமாகிய பாங்கினில் ஓங்கிய ஞானம்" என முடிக்கின்றனர். ஆயினும், சிவஞானியின் கருத்துச்

சிவனடியைச் சிந்திப்பதும், பவஞானியின் கருத்து, அப்பவத்தையற மாற்றும் பாங்கில் நின்று ஒங்குவதும் வேறுபடுத்து நோக்க வேண்டுவனவாகும். இந்நெறிக்கண், நம் ஞான சம்பந்தப் பெருமான்,

"பிணிநீர சாதல் பிறத்தல் இவை
பிரியப் பிரியாத பேரின்பத் தோ(டு)
அணிநீர மேலுலகம் எய்தலுறின்,
அறிமின் : குறைவில்லை, ஆனேறுடை
மணிநீல கண்டம் உடையபிரான்
மலைமகளும் தானும்மகிழ்ந்துவாழும்
துணிநீர்க்க டந்தைத்தடங் கோயில்சேர்
தூங்கானைமாடம் தொழுமின்களே" – (தூங் : 2)

"மறிதிரை படுகடல் விடமடை மிடறினர்
எறிதிரை கரைபொரும் இடைமரு தெனுமவர்
செறிதிரை நரையொடு செலவிலர் உலகினில்
பிறிதிரை பெறுமுடல் பெறுகுவ தரிதே" – (இடைமரு : 2)

என்றும், பலவிடங்களிற் பன்னியிருக்கின்றார்.

இனி, மூன்றாவது "உவமையிலாக் கலை ஞானம்" என்பது. கலைஞானமாவது, உலகில் நிலவும் பலதுறைப்பட்ட கலைகள் பலவற்றையும் கற்றுத் தெளிந்து, கலைப்பொருட்புலமை நிரம்புவதால் எய்தும் ஞானமாகும். எல்லாக் கலைகளையும் முற்றக்கற்று முழுதுணர்வு எய்தும் பெருமை மக்கட்கு இல்லையாகையால், கலைப்புலவர்களின் ஞானம் ஒன்றற்கொன்று உவமை கூறத்தக்க நிலையிலேயே உள்ளவையாகும். அவர் கலை ஞானங்களும், முதற்பொருளை உணர்வதற்குக் கருவியாதலும், ஆகாது, அதன் இன்மை கூறி அறிவை மயக்குதற்குக் கருவியாதலும் உண்டு. அதனால், தனக்கு எவ்வாற்றாலும் உவமையில்லாத முதல்வனோடு கூட்டும் கலைஞானமே உவமையிலாக் கலைஞானமாகும். ஆகலாற்றான் நம்பெருந்தகையார், தாம் ஆராய்ந்து கண்ட கலைத் துறைகளில் பரமனையேகண்டு பரவியிருக்கின்றார்.

"வேதியன், விண்ணவரேத்த நின்றான் விளங்கும் மறை
ஓதிய ஒண்பொருளாகி நின்றார்" – (கோட் : 1)

என்றும்,

"கல்வியாளர்கனகம் அழல் மேனி
புல்குகங்கை புரிபுன் சடையானூர்" –(நறை : 3)

என்றும்,

> "ஓதி நன்குணர்வார்க் குணர்வுடை யொருவர்
> ஒளிதிக ழுருவஞ்சேர் ஒருவர்
> மாதினை யிடமாவைத்த எம்வள்ளல்
> மான்மறி யேந்திய மைந்தர்" – (பாம்பு : 6)

என்றும்,

> "குற்ற மின்மை உண்மை நீ என்(று) உன்னடியார் பணிவார்
> கற்றல் கேள்வி ஞானமான காரணமென்னை கொலாம்"
> – (சோபுர : 7)

என்றும் பிறாண்டும் பலவும் கூறியருளியிருக்கும் திருப்பாசுரங்கள் இவ்வுண்மையைத் தெரிவிக்கின்றன.

இனி, முடிவாகக் கூறியது "உணர்வரிய மெய்ஞ்ஞானம்" என்பது. மெய்ஞ்ஞானமாவது நமது கருவி கரணங்களுக்குப் புலனாகும் பொருள்களின் புறத்தோற்றம், புறப்பயன் முதலியவற்றால் மயங்கிவிடாமல் உண்மைத் தோற்றம், பயன் முதலியவற்றை உணர்ந்து, அவற்றிற்கு முதலாய் விளங்கும் முதற்பொருளை உய்த்துணர்ந்து தெளியும் உண்மை ஞானமாகும். மக்களிற் பெரும்பாலார் அறிவு, பொருள்களின் புறத்தோற்றம், புறப்பயன் முதலிய அறிவால் முடிவு கொண்டு, முதற்பொருள் உண்மை துணியமாட்டாது, கலங்கிப் பெரும்பேதுறுவது நாம் நாளும் காணும் காட்சி. கலை ஞானிகளுள்ளும் சிலர் தமக்குக் கலையறிவு மிக்க வழியும் உண்மையுணர்வின்றி, முதற்பொருட்கு இன்மை கூறுவதையும் நாம் இன்றும் அறிகின்றோம். இதனால் மெய்ஞ்ஞானம் எல்லார்க்கும் கைவரப் பெறுவது அரிதென்பது விளங்குவது கொண்டே, அஃது "உணர்வரிய மெய்ஞ்ஞானம்" எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. மெய்ஞ்ஞானிகட்குக் காணப்படும் பொருள் எல்லாவற்றிலும் பரமானது விளங்கித் தோன்றும் அம்முறையே, பரம மெய்ஞ்ஞானியாகிய நம் ஞானசம்பந்தப் பெருந்தகையார், காணப்படும் பொருள்முற்றும் முதற் பொருளைக் காட்டி அன்பு முகிழ்விக்கும் இயல்புடையவாய் இருப்பதைக் கண்டு,

> "புவிமுதலைம் பூதமாய் புலனைந்தாய்க் கரணம் நான்காய்
> அவையவைசேர் பயனுருவாய் அல்லவுரு வாய்நின்றான் அமருங்கோயில்"
> – (கழும : 7)

"ஓதியாரும் அறிவாரில்லை ஓதி உலகெல்லாம்
சோதியாய் நிறைந்தான் சுடர்ச் சோதியுட் சோதியான்"
– (ஐயா : 7)

எனவும்,

"இன்னவுரு இன்னநிறம் என்றறிவதே லரிதுநீதி பலவும்
தன்னவுருவாமென மிகுத்ததவன் நீதியொடு தானமர் விடம்"
– (வைகா : 4)

எனவும், பிறாண்டும் வகைப்பட விளங்குகின்றார்.

இனி, இம்மெய்ஞ்ஞானிகளின் உள்ளத்தே பரமன் எழுந்தருளியிருப்பன் என்பது சான்றோர் துணிபு, அதனையும் நம் பெருந்தகைப் பிள்ளையார்,

"அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்
றைம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர் கோயில்" – (வீழி – 6)

எனத் திருவீழிமிழலைப் பதிகத்தும்,

"போகமும் இன்பமும் ஆகிப் போற்றி என்பாரவர் தங்கள்
ஆகமும் உறைவிடமாக அமர்ந்தவர்"

எனத் திருப்பாண்டிக்கொடுமுடித் திருப்பதிகத்தும் (5) பிறாண்டும் விளக்கினார்.

இவ்வாறு மெய்ஞ்ஞான நெறிக்கண் நின்று, பரமனைத்தம் மனக்கோயிலிற் கண்டு பரவினார்க்கு அப்பரமன், அவர் கருமங்களைத் தன் கருமமாகக் கொண்டு, அவரைச் சிவமாக்கியருள்வன் என்பது நம் சைவ சமய முடிபொருள். அதனையும்,

"பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம் புலன்கள்வாய்ப்
பாலே போகாமே காவாப் பகையனும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமும் ஒருநெறியாய்ச்

சித்திகே உய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவன் உறையுமிடம்
கத்திட்டோர் சட்டங்கம் கலந்திலங்கு நற்பொருள்
காலேஒவா தார்மேவும் கழுமல வளநகரே" – (கழுமல : 7)

என்ற திருப்பாசுரத்தில் விளக்கி யருளியுள்ளார்.

இனி, அறிவின் பக்குவப் பேற்றிற்குக் கலையறிவும் மெய்யறிவும், பவவுணர்வும், சிவஞானமும் முறையே வேண்டியிருத்தலால், அம்முறையாற் கூறாமல், சிவஞானமும், பவஞானமும் பரமுத்தியாகிய வீடுபேற்றுக்குரிய முறையவாதலும் கலை ஞானமும் மெய்ஞ்ஞானமும் பதமுத்திகட்குரிய முறையவாதலும் கண்டு, அவற்றின் பயனிலை வகையால் சேக்கிழார் பெருமான் இவ்வாறு கூறியிருக்கின்றார் என்று நினைக்கிறேன். மேலும் பதமுத்திக்குரிய கலையறிவு மெய்யறிவுகளைப் பெறாது, தொடக்கத்தேயே நம் ஞானசம்பந்தப் பெருமான், பரமுத்திபயக்கும் பரஞானம் பெற்றாராகலின், அம்முறையே அதனைக் கூறி, ஏனை நம்மனோர்க்கு அறிவுறுத்த வேண்டி, கலையறிவு மெய்யறிவுகளை வற்புறுத்தியிருப்பது கொண்டு, அவற்றைப் பின்னர்க் கூறினாராதல் வேண்டும் எனவும் நினைக்கின்றேன்.

இதுகாறும் கூறியவாறு நம் ஞானசம்பந்தப் பெருந்தகையார் பெற்ற ஞானம் சிவஞானம் முதலிய நான்காய், அவர் பாசுரங்களில் விளங்கித் தோன்றி, உயிர்களைப் பற்றி நிற்கும் ஊனவெம்பந்தம் போக்கும் உரவுக் கருவியாய் நிற்பதனை என் அறிவிற் கெட்டிய அளவு காட்டினேன், என் சொற்பொழிவில், என் சிறுமைக்குரிய குற்றங்களோடு கருத்து வேறுபாடுகளும் இருக்கும். பெரியோர்களாகிய தாங்கள் இவற்றை ஏற்றுத் தகுவனவற்றைக் கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றேன்.

சென்ற சில ஆண்டுகளிற் போல இவ்வாண்டிலும் என்னை இச்சொற்பொழிவு செய்யுமாறு பணித்து, என்னைப் பொருட்படுத்திய சமாஜக் காரியதரிசியார் அவர்கட்கும், இவ்வூர் சமாஜப் பெருமக்களுக்கும், அவர்கட்குத்தக்க துணையாய் சைவப்பணியே தம் வாழ்விற்குரிய மேதக்க பணியெனக் கருதி வேண்டிய உதவிகளைப் புரிந்து சிறப்பித்த சைவத் திரு. கீ. நாராயணசாமி முதலியார் அவர்கட்கும் என் சார்பாகவும், எங்கள் திருவோத்தூர் வாகீச பக்த ஜன சபையின் சார்பாகவும் எங்கள் பெருநன்றியினை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். என்புல்லிய சொற்பொழிவை அமைதியோடு கேட்டு என்னை ஊக்கிய அருஞ் சைவப் பேரவைப் பெருமக்களாகிய உங்கட்கு என் நன்றியைச் செலுத்துகின்றேன்.

இப் பேரவைக் குரிய பெருந்தலைவராய், என்போலும் சிறுவர் சொற்களையும் பெருமகிழ்வோடு ஏற்று ஆதரிக்கும் ஞானாகாரமாய் விளங்கும் அடிகள் திருவடிகளை என் மனமார வணங்கி என் சொற்பொழிவை நிறுத்திக்கொள்ளுகின்றேன்.

“திருஞான சம்பந்தன் செந்தமிழ்கள்
உருஞான முண்டாம் உணர்ந்தார் தமக்கே”

சம்பந்தர் . தெண்ணர் கற்பு.

ஆசிரியர் உரை

அமரர் மு. அருணாசலம் எம்.ஏ., மலர் 42, இதழ்3

திருஞான சம்பந்தர் தாம் பாடிய பதிகள்தோறும், சமணரும் பௌத்தரும் மக்களை நல்வழியில் செலுத்தவில்லை என்று அவர்களைக் குறைகூறி, அவர்களுடைய நெறியில் செல்லாமல் சிவநெறியில் புகுந்து, சிவபெருமான் திருவருளை நாடுக என்று பத்தாம் பாடலில் மக்களுக்கு உபதேசம் செய்கிறார். அவர் வாழ்ந்தது ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி. அக்காலத்தில் பாண்டி நாடு முழுமையும் சைவ சமயத்தைக் கைவிட்டுச் சமண சமயம் புகுந்திருந்தது. பாண்டி மன்னன் அரிகேசரி நெல்வேலி வென்ற நெடுமாறன் என்ற பெயருடையவன்; கூன்பாண்டியன் என்றும் பிற்காலத்துப் புராண வரலாறுகள் கூறும். அவனும் சமண சமயத்தில் ஒழுகி வந்தான். சோழ நாட்டு மணி முடிச் சோழன் மகளாகிய மங்கையர்க்கரசியார் என்ற அரசமா தேவியும், மந்திரி குலச்சிறையாரும் மட்டுமே சைவ சமய நெறியில் ஒழுகினார்கள். அரசன் வழியில் குடிகள் ஒழுகுவது இயல்பாதலால், நாட்டில் சிவாலய பூசை முதலியன குன்றியிருந்தன.

இந்த நிலையில், சம்பந்தர் மங்கையர்க்கரசியார் வேண்டு கோளின்படி, பாண்டிநாடு புகுந்து மதுரையை அடைந்து, ஆலவாய்ச் சோமசுந்தரப் பெருமானை வணங்கி, அங்கு பாண்டிமாதேவி, குலச்சிறையார் ஆகிய இருவர் செய்த பணியையும் குறிப்பிட்டு இறைவனைப் போற்றுகிறார். ஞான சம்பந்தர், 'எனதுரைதனதுரையாக' என்று பாடியவர்; அவர், 'ஆணை நமதே' என்று பாடியவர். வேதாரண்யத்தில், "கோள்கள் யாவும் அடியார்களுக்கு நல்ல நல்ல, எத்தீமையும் செய்யமாட்டா" என்று அழுத்தமாகப் பாடி, அப்பருக்குச் சமாதானம் கூறியவர். அவ்வளவு அவருக்குத் திருவருள் துணையில் ஆழ்ந்த நம்பிக்கை இருந்தபோதிலும் கூட, மதுரை சென்று இறைவனை வழிபட்டபோது, இறைவன் திருவருளை நாடி, "உன் திருவுள்ளம் எனக்கு உதவி செய்யுமாறு அமைய வேண்டும்" என்று இரண்டு பதிகங்கள் பாடினார். இந்த நிலையைச் சேக்கிழார் பின்வருமாறு மூன்று பாடல்களால் குறிப்பிடுகிறார்.

நோக்கிட விதியி லாரை நோக்கிநான் வாது செய்யத்
தீக்கனல் மேனி யானே திருவுள மேஎன் றெண்ணில்
பாக்கியப் பயனா யுள்ள பாலறா வாயர் மெய்ம்மை
நோக்கிவண் தமிழ்செய் மாலைப் பதிகந்தான் நுவலலுற்றார்.

கானிடை ஆடு வாரைக் 'காட்டுமா வுரி' முன் பாடித்
தேனலர் கொன்றை யார்தந் திருவுளம் நோக்கிப் பின்னும்
ஊனமில் "வேத வேள்வி" என்றெடுத் துரையின் மாலை
மானமில் அமணர் தம்மை வாதில்வென் றழிக்கப் பாடி

ஆலமே அமுத மாக உண்டுவா னவர்க்க ளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக வேண்டும்நான் மறைகள் ஏத்தும்
சீலமே ஆல வாயிற் சிவபெரு மானே என்றார்.

காட்டுமாவதுரித்து என்ற முதல் பதிகத்தைப் பாடிய பின், "வேத வேள்வியை நிந்தனை செய்து" என்று இரண்டாம் பதிகத்தைப் பாடி, திருவுள்ளத்தை வேண்டி, "ஆலவாயில் உறையும் எம் ஆதியே, ஞாலம் நின்புகழேயாக வேண்டும்" என்று பாடினார். திருவுள்ளம் கேட்கின்ற இருபது பாடல்களில் 'வாது செயத் திருவுள்ளமே' என்று முடிவன பதினைந்து பாடல்கள். வாதில் வென்றழிக்க, வாதில் சென்றடித்துளற என்பன இரண்டு. மற்ற மூன்றும் பின்வருமாறு கேட்பன – சமண் சித்தரை அழிக்க, சாக்கியப் பேயமண் தெண்ணர் கற்பழிக்க, அமண் அழிப்பரை அழிக்கத் – திருவுள்ளமே. இவற்றுன், 'சாக்கியப் பேயமண் தெண்ணர் கற்பழிக்கத் திருவுள்ளமே' என்பது பற்றி ஒருவர் மிகவும் தவறான, விபரீதமான கருத்துத் தெரிவித்தார். இப்பாடலின் முழுவடிவம் பின்வருவது :–

மண்ண கத்திலும் வானிலும் எங்குமாம்
திண்ண கத்திரு ஆலவா யாய்அருள்
பெண்ண கத்தெழிற் சாக்கியப் பேயமண்
தெண்ணர் கற்பழிக் கத்திரு வுள்ளமே

இக்காலத்தில் பலர் புதிய கருத்துக்களைச் சொல்ல வேண்டு மென்பதற்காக மரபுக்கு மாறாக எதையேனும் தேடுகிறார்கள். யார் எந்தக் கருத்தோடு எந்தச் சொற்களைச் சொன்னார்கள் என்று நோக்காதபடி, மனத்துக்குத் தோன்றிய வண்ணம் திரிக்கவோ மாற்றவோ முற்படுகிறார்கள். இந்த நோக்கமுடையவர்கள் பிற சமயங்களை உயர்த்தியும் சைவம் போன்ற வைதீகச் சமயங்களைக் குறைத்தும் பேசுவது, தங்களுடைய முற்போக்குக்கு எடுத்துக்காட்டு என்று எண்ணுகிறார்கள். இது தமிழ் நாட்டில் மட்டுமன்றி இந்தியா முழுமையிலும் காண்கின்ற ஒரு போக்கு. அரசியல் துறையில் இப்போக்கு இன்று தலைவிரித்தாடுகிறது. இல்லையானால், சைவ வைணவ

சமயங்களில் பெருஞ்சாதனைகள் செய்த ஆசாரியர் எத்தனையோபேர் இருக்க, புத்தருக்காக இந்திய அரசாங்கம் பெருஞ்சிறப்புச் செய்தல் எவ்வாறு பொருந்தும் ?

"ஐயா, சம்பந்தர் பெண்கள் கற்பழிக்கத் திருவுள்ளமே என்று பாடுகின்றாரே ? சமய ஆசாரியர் என்று நீங்கள் கொண்டாடுகின்ற இவர் இப்படிச் சொல்வது தருமம் ஆகுமா ?" என்று ஓரன்பர் கேட்டார். இவ்வன்பருடைய விளக்கம், சமணப் பெண்களைக் கற்பழிக்க வேண்டுமென்று சம்பந்தர் இறைவனை வேண்டுகிறார் என்பது. இங்கு எந்த நிலையில் சம்பந்தர் இறைவன் திருவுள்ளம் அறிய வேண்டிப் பாடினார் ? என்ன பாடினார் ? என்பதை நினைவு கொள்ள வேண்டும். இங்கு நாம் கூறுவது, சேக்கிழார் பாடிய பெரிய புராணத்திலுள்ள சரித முறையையும் கருத்தையும் பின்பற்றியே என்பதை அன்பர்கள் மனத்தில் இருத்தல் வேண்டும்.

சம்பந்தர் தங்கிய திருமடத்துக்குச் சமணர்கள் மந்திரத்தால் தீயிட முயன்றார்கள். மந்திரம் வாய்க்காது போகவே தழல் கொண்டு வந்து திருமடப்புறச்சுற்றினில் தீ வைத்தார்கள். இதை அடியவர்கள் காட்டக் கண்ட சம்பந்தர் "இது என் பொருட்டுச் சமணர் செய்த தீங்காயினும் இறைவன் அடியவர்க்குத் தீங்கு எய்துமோ ? இது மன்னன் ஆட்சி முறைமையில் ஏற்பட்ட வழு. ஆதலால் "பையவே சென்று பாண்டியற்காக" என்று பாடினார், இதன் பிறகே சம்பந்தர் இறைவன் திரு முன் சென்று திருவுள்ளம் அறிய வேண்டிக் "காட்டுமாவது" பாடிய நிகழ்ச்சி. ஆதலால் அவர், நேரே எதிர்த்து வந்து போர் புரியும் அல்லது வாதிடும் அல்லது தீயிடும் ஆண்மையின்றி மறைந்து தீயிட்ட சமணர் இயல்பைப் பழித்து, "பெண்ணகத்து அமண்" என்று கூறினார். ஆண்மைக்கு அஞ்சுகின்ற செயலைப் பெண்மைக்கு உரிய இயல்பு என்று கூறுவது உலகியல்பு. இங்கு பொருள் ஆண்மைத் தன்மை அற்றது என்ற அளவுக்கே பொருந்தும் அன்றிப் பெண்மைக் குணத்தைக் குறிப்பிட்ட தாகாது. ஆதலால் பெண்ணகத்து என்று சம்பந்தர் பாடிய விடத்துப் பொருளாவது ஆண்மையற்றவர்களாகிய சமணர் என்ற அளவே; பெண்கள் என்ற பொருள் இல்லை.

கற்பழிக்க என்ற தொடரினால் பெண்டிர் கற்பை அழிக்க என்று கருதுவது, இடம் நோக்கிப் பார்க்கும் போது முழுமையும் பிழைபட்ட உரை. வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே என்றுதான் அவர் எங்கும் பாடுகிறார். இங்கு கற்பு என்ற சொல்லுக்கு, கொள்கை, வாதம்,

சங்கற்பம், என்பதே பொருளாகும். வாதம் என்ற பொருளிலேயே சம்பந்தர் எல்லாப் பாடலையும் பாடியிருக்கும் போது , இவ்வொரு பாடலில் வேறு பொருள் கொள்வது அவரது கருத்துக்கு முரணாகும். மேலும் கற்பு என்ற சொல்லுக்கு, கோட்பாடு, சங்கற்பம் (கற்பித்துக் கொள்வதாகிய கொள்கை) என்ற பொருள் உண்டு என்பதைக் கம்பராமாயணப் பாடல் ஒன்றினாலும் அறியலாம்.

அண்ணலும் தானையின் அழிவும் ஆங்கவன்
திண்ணெடுங் கொற்றமும் வலியும் சிந்தியா
நண்ணினன் நடந்தெதிர் நமனை இன்றிவன்
கண்ணிடை நிறுத்துவன் என்னுங் கற்பினான்.

(யுத்தகாண்டம் – கும்பகர்ணன் வதைப்படலம், பாடல் 307)

கற்பினான் என்பது இங்குக் கருத்துடையவன், உறுதியுடையவன், கற்பித்ததாகிய சங்கற்பமுடையவன் என்று பொருள்படும். இதுபோலவே சம்பந்தர் பாடலிலும் ஆண்மைத் தன்மையில்லாத நெஞ்சமுடைய அமணர்களாகிய அறிவற்றவர்களுடைய வாதத்தை அழிப்பது திருவுள்ளமே என்றே பொருள் கொள்ள வேண்டும். (தெண்ணர் – அறிவில்லாதவர்) கற்பழித்தல் என்பதற்குச் சந்தர்ப்பம் நோக்காது சாமானிய வழக்கில் வழங்குகின்ற உரையைச் சொல்வது பொருந்தாத விபரீத உரையாகும்.

சமயாசாரியர்களைக் குறித்துப் பேசும்போது, பக்தி ஒன்றே மேலோங்கி நிற்கும் உணர்ச்சியாயிருத்தல் வேண்டும். வேறு உணர்ச்சி கொண்டு ஆராய்ச்சியினுள் புகுவது, சமய ஆசாரத்தைக் குலைப்பது மட்டுமல்லாமல் சமூகத்தையே சீர்குலைப்பதுமாகும். இது தகாது என்பதற்காகவே இங்கு விளக்கிச் சொல்ல நேரிட்டது.

இந்தியாவின் தலைமை நீதிபதி, பிற நீதிபதிகள் அனைவருக்கும், 22–10–68 அன்று சென்னை நகரில் பேசிய பேச்சில் வெளியிட்ட ஒரு குறிப்பு எல்லோரும் சிந்தித்தற்குரியது. "சட்டசபை நிறைவேற்றியுள்ள ஒரு சட்டத்தில் வரும் சிக்கலைத் தீர்க்கச் சட்டத்திற்குப் பொருள்பண்ணுமிடத்து, நீதிபதிகள், அச்சட்டம் என்ன நோக்கத்துக்காகச் செய்யப்பட்டது என்பதை ஆய்ந்து அதற்கேற்பவே பொருள் கொள்ள வேண்டும். மற்றப்படி சொல்லுக்குச் சொல்லாகப் பொருள் கொண்டு தீர்ப்பளித்தல் சட்டம் இயற்றினோர் கருத்தைச் செயல்படுத்தியதாகாது." சட்டத்துக்கே நிலை இது வென்றால், சமயாசாரியரின் அருள் வாக்கை நாம் எவ்வளவு சிந்தித்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும் !

மார்ச்சு 2001ல் நடைபெற்ற பெருமன்ற நிகழ்ச்சிகள்

புரசை பாலசுப்பிரமணியம் செயலாளர்/சொற்பொழிவுகள்.

1. பெரியபுராணம் தொடர் சொற்பொழிவு

10.03.2001 சனிக்கிழமை பெருமன்றத்தில் நடைபெற்றது. திருமுறை இசைமணி பா. வள்ளி அவர்கள் திருமுறை இசையினை வழங்கினார்கள். "தொல்காப்பியச் செல்வர்" முனைவர் கு. சுந்தரமூர்த்தி அவர்கள் "திருநாவுக்கரசு நாயனார் புராணம்" வரலாற்றுப் பகுதியினைத் தொடர்ந்து நயம்பட விரித்துரைத்தார்கள்.

இத்தொடர் சொற்பொழிவு திங்கள் தோறும் சென்னை. குரோம்பேட்டை "கயிலைப் புனிதர்" டாக்டர் அ. மாணிக்கம் எம்.எஸ். அவர்கள் நல் ஆதரவில் சிறப்பாக நடைபெறுகிறது.

2. நாயன்மார் வழிபாட்டு விழா

31.03.2001 சனிக்கிழமை பெருமன்றத்தில் நடைபெற்றது. திருமுறை, பெரிய புராண இசையினைப் பெரும்பாண நம்பி மா. கோடிலிங்கம் அவர்கள் நயம்பட வழங்கிச் சிறப்பித்தார்கள். எறிபத்தர், தண்டியடிகள், நேசநாயனார் ஆகிய நாயன்மார்கள் வரலாற்றினை அன்பர்கள் சுழல் முறையில் வாசித்தார்கள். "திருத்தொண்டத் தொகை" "போற்றித் திருத்தாண்டகம்" கூட்டாக ஓதப்பட்டு வழிபாடு நடைபெற்றது. வழிபாட்டிற்குப் பின்னர் அன்பர்களுக்கு அருளமுது வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கு அறக்கட்டளை நிறுவியுள்ளவர்கள் (1) திரு. டி. இராமசாமி முதலியார் (2) திரு. கே. கணேசன் (3) திரு. முருகு. இராமலிங்கம் (4) திரு.சு.பொன்னுசாமி (5) திரு. தியாகராசன் (6) திரு. எஸ். இராசரத்தினம் (7) திரு. அருணகிரி பொன்னம்பலம் (8) திரு. தி. சிவநேசன் (9) திரு. புரசை பாலசுப்பிரமணியம் (10) திரு. வீ. தட்சிணா மூர்த்தி (11) திரு. மா.க. தாண்டவமூர்த்தி (12) திரு. என். சிவராமகிருஷ்ணன்

திங்கள் தோறும் நல் ஆதரவு அளிப்பவர்கள். திரு.மு.க. தணிகாசலம், திரு. மா. கோடிலிங்கம், செல்வி மு. இரகுபாய், திரு. அண்ணாமலை பழநியப்பன், திரு. மு. ந. மாசிலாமணி

3. திருமந்திரம், சிவப்பிரகாசம் தொடர் வகுப்புகள்

திருமந்திரம் வகுப்பு 01.03.2001, 08.03.2001, 15.03.2001, 22.03.2001, 29.03.2001, ஆகிய ஐந்து நாட்கள் ஐந்தாம் தந்திரம் சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் சத்திநிபாதம் ஆகிய பகுதிகளுக்குச் சித்தாந்தம் இதழ் ஆசிரியர் முனைவர். வை. இரத்தினசபாபதி அவர்கள் விரிவுரை யாற்றினார்கள்.

நல் ஆதரவு : திருமிகு. இரா. கோவிந்தன்,

சிவப்பிரகாசம் வகுப்பு 02.03.2001, 06.03.2001, 16.03.2001, 23.03.2001, 30.03,2001 ஆகிய ஐந்து நாள்கள் உண்மை அதிகாரம் – ஆன்ம இலக்கணம் பற்றிச் சித்தாந்தம் இதழ் ஆசிரியர் முனைவர். வை. இரத்தினசபாபதி அவர்கள் விரிவுரையாற்றினார்கள்.

நல் ஆதரவு : திருமுறைக் காவலர் அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் கட்டிட வாரியம் அறக்கட்டளை.

அறக்கட்டளைகள்

திருமந்திரம் – மனப்பாடப்போட்டிப் பரிசு விழா – அறக்கட்டளை

பெருமன்ற வாழ்நாள் உறுப்பினர் சேலம் செவ்வாய்ப் பேட்டை பிட்டா சு. பிரபாகரன் அவர்கள் தனது பாட்டனார் சேலம். செவ்வாய்ப் பேட்டை பிட்டா. ந. கிருஷ்ணய்யர் நினைவாக, திருமூலர்திருமந்திர விழிப்புணர்வுச் செயலுக்காக ரூ. 5000/– (ரூபாய் ஐயாயிரம்) வழங்கி, "திருமந்திரம் – மனப்பாடப் போட்டிப் பரிசு விழா" என்ற அறக்கட்டளை அமைத்துள்ளார்கள். பெருமன்றச் செயற்குழு அவர்களைப் பாராட்டி நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சந்தானாச்சாரியார் விழா

சென்னை. மேற்கு மாம்பலம் திரு. அருணகிரி பொன்னம்பலம் அவர்கள் தனது மாமனார் திரு. வேலாயுத முதலியார் நினைவாக "சந்தானாச்சாரியார் விழாவில்" அன்பர்களுக்குச் சுவை நீர் வழங்குவதற்கு ரூ. 1000/– (ரூபாய் ஆயிரம்) வழங்கி அறக்கட்டளை அமைத்துள்ளார்கள். பெருமன்றச் செயற்குழு அவர்களைப் பாராட்டி நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் 95ஆம் ஆண்டு விழா மாநாடு

நிகழ்ச்சி நிரல்

இடம் : அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் திருமண மண்டபம், இரத்தினகிரி

நாள் : 19.05.2001, 20.05.2001 (சனி, ஞாயிறு)

முதல் நாள் : 19.05.2001 சனிக்கிழமை (காலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை)

5.00 – 6.00	சிவபூசை
6.00 – 8.00	திருமுறைப் பாராயணத்துடன் மலை வலமும், திருக்கோயில் வழிபாடும். திருமுறை வாணர்கள் பேராசிரியர் **மா. வயித்தியலிங்கம்** பெரும்பாண நம்பி **மா. கோடிலிங்கம்**
8.00 – 8.30	இடபக்கொடி ஏற்றுதல் : அருட்டிரு. **பாலமுருகனடிமை சுவாமிகள்** கொடிக்கவி : **புலவர். இராம. வேங்கடேசன்**

95–ஆம் ஆண்டு விழா மாநாடு – தொடக்கவிழா

(காலை 9.30 முதல் பிற்பகல் 12.30 மணி வரை)

இறை வணக்கம் :

வரவேற்புரை	(1) "பொற்கிழிக் கவிஞர்" **வே.ரா. சிவஞானவள்ளல்** (2) "சித்தாந்த ரத்தினம்" **செ.வே. சதாநந்தன்,** துணைத் தலைவர், பெருமன்றம்
தலைமை	(1) "சித்தாந்தச் செல்வர்" **எஸ். தியாகராசன்** தலைவர், பெருமன்றம்
முன்னிலை	கலவை. அருட்டிரு. **சச்சிதானந்த சுவாமிகள்**
தொடக்கவுரை	சைவப் பெரியார் **சோம. ஆறுமுகம்**

"சித்தாந்த சரபம்" விருதளிப்பு விழா

பேராசிரியர் முனைவர். கு. சுந்தரமூர்த்தி அவர்கள் இந்த ஆண்டு (2001) இச்சீரிய விருதினைப் பெறுகின்றார்கள்.

அறிமுக உரை	"சைவ சித்தாந்த சிகாமணி" **ச. நா. ஆலாலசுந்தரம்**

விருதளிப்பு	அருட்டிரு பாலமுருகனடிமை சுவாமிகள்
ஆசியுரை	காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் திருவம்பல ஞானப் பிரகாச. தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
ஏற்புரை	பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி

நூல் வெளியீடு

1. "காயசித்தி" (மறுபதிப்பு)

நூல் வெளியிடுபவர்	சிவத்திரு எம். ஆர்.தாமோதரன்
நூலைப் பெறுபவர்	சிவத்திரு ஜி. நாகநாதன்

2. சிவலிங்கபூசை (மறுபதிப்பு)

நூல் வெளியிடுபவர்	கயிலைப் புனிதர் டாக்டர் அ. மாணிக்கம்
நூலைப் பெறுபவர்	சிவத்திரு அண்ணாமலை பழநியப்பன்
ஆண்டு அறிக்கை	சிவத்திரு புரசை. பாலசுப்பிரமணியம், செயலாளர் சொற்பொழிவுகள்
நன்றியுரை	சிவத்திரு தி. சிவநேசன், செயலாளர், கடிதப் போக்குவரத்து

உணவு இடைவேளை

சைவர் மாநாடு

(மாலை 3.00 மணி முதல் 7.00 மணி வரை)

இறை வணக்கம்	
வரவேற்புரை	தாளாண்தகவர் சி.எஸ். குப்புசாஜ், துணைத் தலைவர், பெருமன்றம்
தலைமை உரை	தொண்டை மண்டல ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் திருவம்பல ஞானப் பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

சொற்பொழிவு

சித்தாந்த சரபம் முனைவர். வை. இரத்தினசபாபதி
பொருள் : திருக்குறட் குமரேச வெண்பா

பேராசிரியர் முனைவர் வி.மு. பழனி
பொருள் : திருமந்திரச் செம்பொருள்

சித்தாந்த கலாநிதி மா. அமிர்தலிங்கனார்
பொருள் : சைவ சித்தாந்தமும் சமுதாய மேம்பாடும்

நன்றியுரை — சிவத்திரு. புரசை. பாலசுப்பிரமணியம் செயலாளர், சொற்பொழிவுகள்

திருமுறை இசை அரங்கம்

(முன்னிரவு 7.30 மணி முதல் 9.30 மணி வரை)

பேராசிரியர் மா. வயித்திய லிங்கன்

பெரும்பாண நம்பி. மா. கோடிலிங்கம் குழுவினர்

இரண்டாம் நாள் : 20.05.2001 ஞாயிற்றுக்கிழமை

சிவதீக்கை வழங்குதல்

(காலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை)

வழங்குபவர் : அம்பலவாண தேசிகர் ஒளியகம் **ந.ரா.ஆடலரசு**

7.00 – 8.30 திருக்கோயில் வழிபாடு

சைவ மங்கையர்

(காலை 9.30 முதல் பிற்பகல் 12.30 மணி வரை)

இறை வணக்கம்

வரவேற்புரை **திருமதி லட்சுமி**

தலைமையுரை **திருமதி முனைவர். கோமதி சூரியமூர்த்தி** அவர்கள், மதுரை

சொற்பொழிவு

பேராசிரியை டாக்டர். கோ. சௌசல்யா, பொருள் : நயத்திற்குச் சுந்தரனார்
புலவர் ஆண்டாள் ஜெயச்சந்திரன், பொருள் : முத்துக்குமார சுவாமிபிள்ளைத் தமிழ் செந்தமிழ் விறவி புலவர் கோ.பா. தாமரை, பொருள் : சிவநெறித் தொண்டில் மங்கையர் பங்கு.

நன்றியுரை

உணவு இடைவேளை

கலந்துரையாடல்

(பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணி வரை)

சைவ இளைஞர் மாநாடு

(பிற்பகல் 3.30 மணி முதல் மாலை 7.00 மணி வரை)

இறை வணக்கம்

வரவேற்புரை **சிவத்திரு. அருள் சிவ. சுப்பிரமணியம், துணை ஆசிரியர் ஆங்கில சித்தாந்தம்**

தலைமையுரை **வேள்விச் சதுரர் மு.பெ. சத்திய வேல்முருகன் சித்தாந்தக் கவிமணி செந்தமிழ்**

சொற்பொழிவு

கவிவேல். இரா. ஞானசேகரன், பெரிய புராணத்தில் பக்திச்சுவை

முனைவர். சா. சரவணன், பொருள் : தமிழர் சமயம், தமிழர் வேதம்

சிவத்திரு முருக இராமலிங்கம், பொருள் : 20ஆம் நூற்றாண்டின் சித்தாந்த அறிஞர்கள்.

நன்றியுரை

புரசை. பாலசுப்பிரமணியம், செயலாளர், சொற்பொழிவுகள்

மங்கல வாழ்த்து

நடைபெற இருக்கும் பெருமன்ற நிகழ்ச்சிகள் மே 2001

வ எண்.	நாள்	விழா விபரம்	சொற்பொழிவாளர்/ பொருள்	இடம்/நேரம்
1.	01.05.2001 செவ்வாய்	சிவஞான சுவாமிகள் விழா பதி இலக்கணமும் ஞானவழிபாடும் விழா	சித்தாந்தச் செல்வர் எஸ்.தியாகராாசன் பதி இலக்கணமும் ஞான வழிபாடும் பேராசிரியை செல்வி மு. இரகுபாய், சிவஞான முனிவரின் இலக்கியப் பணி	பெருமன்றம் மாலை 6.00 மணி
2.	08.05.2001 செவ்வாய்	திருக்குறள் முற்றோதல்	க.பொ. இரத்தினம்	பெருமன்றம் மாலை 6.00 மணி
3.	12.05.2001 சனி	பெரிய புராணம் தொடர் சொற்பொழிவு	தொல்காப்பியச் செல்வர் முனைவர் கு. சுந்தரமூர்த்தி திருநாவுக்கரசர் புராணம்	பெருமன்றம் மாலை 6.00 மணி
4.	23.05.2001 செவ்வாய்	திருத்தொண்டர் புராணத் தொகை யடியார் விழா	முனைவர். க. திருநாவுக்கரசு தொகையடியார்களின் சிறப்பு	பெருமன்றம் மாலை 6.00 மணி
5.	26.05.2001 சனி	நாயன்மார் மாத வழிப்பாட்டு விழா	நாயன்மார் வரலாற்றைச் சுழல் முறையில் வாசித்தல் கூட்டாக வழிபாடு செய்தல்	பெருமன்றம் மாாலை 6.00 மணி

நன்கொடைகள்

பெருமன்ற வாழ்நாள் உறுப்பினர் சென்னை. ரங்கராஜபுரம் திரு. கோ. நாகநாதன் அவர்கள் பெருமன்ற நிகழ்ச்சிகள் நடக்கும் போது அன்பர்கள் அமர்ந்து கேட்பதற்கு வசதியாக மேலும் ஐந்து (பிளாஸ்டிக்) நாற்காலிகள் வாங்குவதற்காக ரூ. 1500/– (ரூபாய் ஆயிரத்து ஐநூறு) வழங்கியுள்ளார்கள்.

பெருமன்ற வாழ்நாள் உறுப்பினர் சென்னை திருவல்லிக்கேணி திரு. என். கணபதி அவர்கள் "சிவகாமியம்மை" ஐம்பொன் சிலை வாங்குவதற்காக ரூ. 1001/– (ரூபாய் ஆயிரத்தொன்று) வழங்கியுள்ளர்கள்.

நன்கொடை வழங்கியுள்ளவர்களின் சைவத் தொண்டினைப் பெருமன்றச் செயற்குழு பாராட்டி நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

புரசை. பாலசுப்பிரமணியம்
செயலாளர்/ சொற்பொழிவுகள்

வேண்டுகோள்

95 ஆம் ஆண்டு விழாவுக்கென அமையும் பெரும் பொருட் செலவை ஈடு கட்டும் வகையில் உறுப்பினர்கள் கருணை கூர்ந்து, விரைந்து நிதியுதவி அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர் (சொற்பொழிவுகள்)

TN/Chief PMG 423/ SIDDHANTHAM MAY 2001

LICENCED TO POST WITHOUT PREPAYMENT
NO. G/T.N./CHIEF PMG WPP/208

பெறு. திரு. C.N. திருநாவுக்கரசு.
அப்பர் அன்பகம் 7/2 சர்ச் புதுத்தெரு
காரைக்குடி. 630002. T.T. Nagar

DATE OF POSTING 30.4.2001

IF NOT DELIVERED PLEASE RETURN TO SENDER :
SAIVA SIDDHANTHA PERUMANRAM
4, VENKATESA AGRAHARAM ROAD, MYLAPORE, CHENNAI - 600 004.

POSTED UNDER PERMIT NO. MA.EC. 16/1981 of RBI

2001 மே திங்கள் சிறப்பு நாள்கள்

6.5.2001	இசை ஞானியார்
7.5.2001	திருக்குறிப்புத் தொண்டர்
9.5.2001	திருவாதிரைத் திருநாள்
22.5.2001	கழற்சிங்கர்
27.5.2001	நமிநந்தியடிகள்
28.5.2001	சோமாசிமாறர்

குறிப்பு : மே திங்களில் வரும் நாயன்மார்களின் குருபூசை 26.5.2001 சனிக்கிழமை மாலை 5–45 மணிக்கு மன்ற அலுவலகத்தில் நடைபெறும். அன்பர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

செயலர்

ஆசிரியர் : முனைவர் வை. இரத்தினசபாபதி
மன்றத்திற்காக வெளியிடுபவர் : சிவத்திரு. சி.வி. சதாநந்தன்
அச்சிடுபவர் : சிவ. வி.ஆர். மயூரப்பிரியா,
ஸ்ரீ கைலாஸ் பிரிண்டர்ஸ்
32, பங்காரு நாயக்கன் தெரு, சென்னை – 2